Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-29 | 14-08-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-178



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12426)

# தெற்கில் நடக்கும் கொலைகளுக்கு புலிகள் மீது குற்றம் சாட்டுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)


தெற்கில் நடக்கின்ற கொலைகளுக்கு உடனடியாக விடுதலைப்புலிகள் மீது எழுந்தமானமாகக் குற்றம் சுமத்துவது அரசாங்கத்தினதும், படைத்தரப்பினதும் வழமையான ஒரு நடவடிக்கையாக இருக்கின்றது. எங்களைப் பொறுத்தவரையில் இந்தக் கொலைக்கான காரணங்கள், ஆதாரங்களைக் கண்டறிவதை விட்டு விட்டு விடுதலைப்புலிகள் மீதுஇப்படியான ஒரு குற்றத்தை உடனடியாக சுமத்த முற்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அமைச்சர் கதிர்காமர் கொலை குறித்து பி.பி.சிக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது ஒரு யுத்தநிறுத்த சூழல் மிக உயர்ந்த பாதுகாப்பு வழங்கப் பட்டிருந்த பிரதேசத்திற்குள் சென்று விடுதலைப்புலிகள் ஒரு தாக்குதலை மேற்கொள்வது என்பது சாத்தியமற் றது. இதனை நாங்கள் முழுமையாக மறுக்கின்றோம் என்றார்.

ஆனால் இது நடைபெற்ற விதம் அதாவது மிகத் துல்லியமாக திட்டமிடப்பட்டு நடைபெற்றிருக்கின்ற விதம் முன்னைய நிகழ்வுகளுடன் ஒப்பிடும்போது ஏறக்குறைய விடு தலைப்புலிகளின் பாணியைப்போல இருக்கின்றது என்று சனாதிபதியின்

(12ஆம் பக்கம் பார்க்க)



அமைச்சர் கதிர்காமரின் உடல் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## கதிர்காமரின் கொலை தமிழ் தம்பதியினர் கைது

(கொழும்பு)

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் கொலை தொடர்பாக தமிழ் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு புல்லர்ஸ் வீதியில் வசித்து வந்த லக்ஷ்மன் தளைய சிங்கம்(வயது-58) மற்றும் அவரது துணைவியார் விபியன் செல்வலோஜினி தளையசிங்கம் ஆகியோர் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

கொழும்பின் முன்னணி வர்த்தக நிறுவனம் ஒன்றில் நிர்வாக மேலாளராகப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமரின் கொலை குறித்து ஊகிப்பது அவசரப்படுவதாகிவிடும்

### -விதார் ஹெல்கேசன்

(லண்டன்)

கதிர்காமருடைய படுகொலைச்சம்பவம் இலங்கையுடைய சமாதான வழிமுறைகளில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இப்போது ஊகிப்பது அவசரப்படுவது ஆகிவிடும் என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்துள்ளார்.

ஆனால் சமாதான வழிமுறையில் ஈடுபட்டிருக்கும இரண்டு தரப்பினரும் ஏனையவர்களும் இயன்ற அனைத்தையும் செய்துபோர் நிறுத்த ஒப்பந்தம் பாதிக்கப்படாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும்

இலங்கையினுடைய சமாதனச்சூழல் மிக மோசமாக இருக்கின்றது. போர் நிறுத்த ஒப்பந்தம் பற்றியும், அதைக் கடைப்பிடிக்கும் விதம் பற்றியும் சம்பந்தப்பட்டவர்கள் கடுமையாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதைக் கடந்த ஒரு மாதமாக நாங்கள் திரும்பத் திரும்ப கூறி வந்திருக்கின்றோம். போர் நிறுத்தம் அமுல் செய்யப்படுவது குறித்து இரு தரப்பும் பேச்சு

(12ஆம் பக்கம் பார்க்க)

## அவசர காலச் சட்டம் அரசாங்கத்தால் பிரகடனம்

### பத்து நாட்கள் நீடிக்கவும் முடிவு

(கொழும்பு)

நாட்டில் அவசரகால நிலை அடுத்து வரும் பத்து நாட்களுக்கு அமுலில் இருக்கும் என பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர் சனாதிபதியின் தலைமையில் நேற்றுக் கூடிய தேசிய பாதுகாப்புச்சபை இதற்கான முடிவை மேற் கொண்டதாக தெரிவித்தார். அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனக்குறிப்பிட்ட பொலிஸ்மா அதிபர், அமைச்சரை கொலை செய்தவர்கள் இலக்கை மேற்கொண்டதாகக் கூறப்படும் இடத்தில் தங்கியிருந்து தாக்குதலை நன்கு

(12ஆம் பக்கம் பார்க்க)



முகமாலையில் யாழ். செல்ல காத்திருந்த பயணிகள்

## ஓமந்தை, முகமாலையூடான போக்குவரத்து பலமணிநேரம் படையினரால் முடக்கம்

(வவுனியா)

ஏ-9 வீதி ஓமந்தை, முகமாலை பகுதிகள் ஊடான போக்குவரத்தை நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை படையினர் தடுத்துள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்,இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு,வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் தலையீட்டை அடுத்து நண்பகல் 12.20 மணியளவில் போக்குவரத்திற்காக ஓமந்தை பாதை திறக்கப்பட்டது.

ஏ-9 வீதி ஊடான போக்குவரத்தை நேற்றுக் காலை படையினர் தடுத்ததை அடுத்து தாண்டிக்குளத்தில் படையினருக்கும் ,பொதுமக்களுக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்நிலையில் நண்பகல்12.00 மணியளவில் தாண்டிக்குளத்திற்குச் சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும்,வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகர்ப்பகுதியில் ஆயிரம் பொலிசார் தேடுதல்

(கொழும்பு)

கதிர்காமரின் கொலை தொடர்பில் தற்சமயம் கொழும்பு நகரில் மாத்திரம் சுமார் ஆயிரம் பொலிசார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். சந்தேக நபர்களைத் தேடி தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். இதனிடையே வெள்ளவத்தைப் பகுதியின் அனைத்து ஒழுங்கைகளிலும் பொலிசாரும், இராணுவத்தினரும் நிறுத்தப் பட்டுள்ளார்கள். .(32)

## முல்லை,மன்னார் மாவட்டங்களில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு

(நமது நிருபர்)

வவுனியா எழுச்சி மாநாட்டில் அங்ககரிக்கப்பட்ட தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்துக்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தை கோரி முல்லை. மாவட்டத்தில் மாபெரும் எழுச்சி மாநாடு அடுத்தமாதம் 14 ஆம் திகதி புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற முக்கிய கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பிலுள்ள முல்லை. மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் முல்லை மாவட்ட தேசிய எழுச்சி பேரவை செயலாளரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ச.கனகரட்ணம் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் உமைநேசன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து முல்லைமாவட்ட தமிழ் சங்கத்தலைவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறவிடப்பட்டுள்ளது

சகிலா வேதாரணியம் என்பவருடைய நிரந்தரபயண அனுமதிச் சிட்டை, தேசிய அடையாள அட்டை, (இல 838602053V) மற்றும் இரண்டு படங்களுடன் கச்சேரிக்கு அருகாமையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தமிழரசி நகை மாடம், கிளிநொச்சி என்ற முகவரியல் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (6538)

### தவறவிடப்பட்டுள்ளது

13.08.2005 அன்று பா.சுரேஸ்குமார் என்பவருடைய உந்துருளியின் புத்தகம் மற்றும் சில ஆவணங்கள் அடங்கிய பொதியொன்று கிளி. வைத்தியசாலைக்கு முன்பாக தவறுதாலக மாறி எடுத்துச் சென்றுள்ளன. எடுத்தவர்கள் மின்னல் இலத்திரனியல் அல்லது ஈழநாதம் பணிமனை அல்லது கற்பகம் உணவகத்தில் ஒப்படைக்கவும். தகவல்:- பா.சுரேஸ்குமார். (6539)


# சிறிலங்காவில் அவசரகாலசட்டப்பிரகடனம்: ஆசிய மனிதஉரிமைகள் அமைப்பு கண்டனம்

(புதுடில்லி)

சிறிலங்காவில் அவசரகால சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளமைக்கு புதுடில்லியை தலைமையிடமாகக்கொண்ட ஆசிய மனித உரிமைகள் அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் இயக்குனர் சுகாஸ் சக்மா வெளியிட்டுள்ள அறிக்கையில், சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் கொலைசெய்யப்பட்டதற்கு விசாரணை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அவசர கால சட்டத்தை பிரகடனப்படுதியிருப்பது கடுமையானது

சிறிலங்கா அரசின் இந்த நடவடிக்கை மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது. கொலையாளிகளைப் பிடிப்பதற்காக ஊரடங்கு,கொழும்பை மூடிவிட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற சட்டபூர் வமான நடவடிக்கைகளை வேண்டுமானால் அரசாங்கம் மேற்கொள்ளலாம்.

இந்த அவசரகாலச் சட்ட பிரகடனம் மக்களிடையே விரோத மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடும்.இந்தப் பிரகடனம் சிறிலங்கா அரசும் பங்கேற்றுள்ள மக்களின் அடிப்படை உரிமைகள்தொடர்பான சர்வதேசஅமைப்பின் விதிகளுக்கு எதிரானது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# புது.பொன்னம்பலம் மருத்துவமனையில் செவ்வாய் மனநல சிகிச்சை

இங்கிலாந்தில் இருந்து வருகைதந்திருக்கும் மனநல நிபுணர் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை மனநலசிகிச்சை வழங்கவுள்ளார்.

குறிப்பாக மனஅழுத்தம், மனப்பதற்றம், நித்திரையின்மை, மனநிலைபாதிப்பு போன்ற பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு விசேட சிகிச்சையும், ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது. பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையின் வெளிநோயாளர் பகுதியினை தொடர்புகொள்ளவும்.

# மூன்று புதிய பிரதி அமைச்சர்கள் சனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று புதிய பிரதி அமைச்சர்களை நேற்று முன்தினம் நியமித்துள்ளார்.

இதன் அடிப்படையில் மகிந்தானந்த அழுத்கமகே சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு துறை பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, எச். ஆர் மித்திரபால வர்த்தக மற்றும் நுகர்வோர் துறை பிரதியமைச்சராகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

அதேவேளை, நிர்மல கொத்தலாவல சிறு கைத்தொழில் பிரதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். (32)

# வர்த்தகர்களுக்கான ஒன்று கூடலும் சமகால அரசியல் கருத்தரங்கும்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு வர்த்தகர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடலும். சமகால அரசியல் கருத்தரங்கும் அண்மையில் இடம் பெற்றது.

உடையார்கட்டு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில், சமகால அரசியல் கருத்துரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா வழங்கினார்.

இந் நிகழ்வில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர், வர்த்தகர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (19)

# புதுக்குடியிருப்பு ம.க. பொன் விழா இரண்டாம் நாள் நிகழ்வுகள்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் கடந்த வியாழன் மாலை 3.30 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட கலாச்சார மண்டபத்தில் பாடசாலை முதல்வர் பி.கே. சிவலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் முல்லை. வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் சிறப்பாக இடம் பெற்றன.

இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமாரும் கலந்து கொண்டார். (08)


### பெற்றுக்கொள்ளவும்

சண்முகநாதன் நிசந்தன் (உடையார்கட்டு தெற்கு) என்பவரது தேசிய அடையாள அட்டை, நிரந்தரப் பயண அட்டை, சிறு தொகைப் பணம் என்பன கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவன் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள்

### 01.கலை முதற் தேர்வு -2002 & 2003

மேற்படி பரீட்சைகள் 24.08.2005 தொடக்கம் 17.09.2005 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளது.

கட்டம்-01

24.08.2005 தொடக்கம் 04.09.2005 வரையிலான காலப் பகுதியில் இடம் பெறும் பரீட்சைகள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உள்ள பரீட்சை மண்டபங்களில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கட்டம்-02

10.09.2005 தொடக்கம் 11.09.2005 வரையிலான காலப் பகுதியில் இடம் பெறும் பரீட்சைகள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.

கட்டம்-03

17.09.2005 ESL 1.0 ஆங்கிலப் பரீட்சை கட்டம்-02 இல் குறிப்பிட்ட இரு பரீட்சை நிலையங்களிலும் நடைபெறும்.

நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 20.08.2005 தொடக்கம் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர் 12.08.2005 (சி.12526)



## இரண்டாம் ஆண்டு நீங்காத நினைவுகளில்

தோற்றம் 1940 04 19



மறைவு 2003 08 06

திதி:- நவமி 14-08-2005

அமரர். வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் மகேந்திரன் (சாமியார்)

(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஓய்வு பெற்ற சிரேஷ்ர உத்தியோகத்தர்)

பப்பா பப்பா என தேடுகின்றோம்- உங்களை
காணமுடியவில்லை- ஆனால்
பப்பா, பப்பா என கூப்பிடும்போது - உங்கள்
அன்புக் குரல் கேட்கிறதே;
நாமெல்லாம் அக்குரலின் இனிமையில்
கட்டுண்டு போகின்றோமே- நீங்கள்
விட்டுச் சென்ற வரலாற்றுப் பாதங்களின் தடங்கள்
தெளிவாய் தெரிகின்றது எமக்கு-அந்த
தடங்களின் மீது எங்கள் பாதங்களை
பதித்துச் செல்கின்றோம்
எத்தனை ஆண்டுகள் வந்து சென்றாலும்
எங்களுடன் தானே வாழ்வீர்கள்.

"மகேந்திரா இல்லம்",
இல 54, 05ஆம் பண்ணை,
கனகபுரம். கிளிநொச்சி.

சாமியார் குடும்பத்தினர். (6540)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கலைப்பீட, இராமநாதன் நுண்கலைக்கழக
### பரீட்சைகள்-2005

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மூன்று வருட மற்றும் நான்கு வருடக் கற்கை நெறியைப் பயின்று அனைத்து பிரதான பாட அலகுகளிலும் சித்திபெற்றும் இரண்டாம் மொழி ஆங்கிலத்தில் சித்தியின்மையால் பட்டக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்யாதுள்ள மாணவர்களிடமிருந்து மட்டும் இரண்டாம் மொழி ஆங்கிலபாடத்திற்கான விசேட மீள்பரீட்சைகளிற்கு விண்ணப்பங்கள் 11.08.2005 திகதி முதல் 22.08.2005 திகதி வரை கலைப்பீடாதிபதி அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(01)முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு
கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்

(02)இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு
கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம்

(03)மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு
கலை, இராமநாதன் நுண்கலைக்கழகம

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 50/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர் 11.08.2005 (சி.12527)

# காஸாப் பகுதியில் இருந்து வரும் 17இல் இஸ்ரேல் இராணுவம் வெளியேற முடிவு

(ஜெருசலேம்)

**பலஸ்தீனத்திற்குச் சொந்தமான காசாப் பகுதியில் ஆக்கிரமிப்புச் செய்திருந்த இஸ்ரேல் வரும் 17 ஆம் திகதி வெளியேறுவதாக அறிவித்துள்ளது. இதன் பிரகாரம் இஸ்ரேலிய இராணுவமும் அங்கு குடியமர்த்தப்பட்ட யூதர்களும் அந்தப் பகுதியை விட்டு வெளியேறுவர்.**

யூதர்களில் சிலர் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற போதும் திட்ட மிட்டபடி வாபஸ் நடைபெறுமென இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் இஸ்ரேல் தொலைக் காட்சிக்குப் பேட்டி அளித்த அமெரிக்க சனாதி பதி புஷ்; காஸா வெளியேற்றம் இஸ்ரேலுக்கு நல்லது என்று கூறினார்.

இந்த வெளியேற்றத்திற்குப் பின் வன்முறை நின்று விடும். அமைதி நிலவும் என்றும் புஷ் கூறினார்.



தென்காஸா பகுதி றாபா எல்லைக்கு அண்மையாக ரோந்தின் போது பலஸ்தீனிய இராணுவ வீரர் ஒருவர் தனது கையை அசைக்கிறார்.

# தீவிரவாதத்தை ஆதரித்த மதகுருவுக்கு இங்கிலாந்தில் தடை





பிரிட்டனால் தடை செய்யப்பட்ட தீவிரவாதி பூமர்பக்றி மொகமட்டை ஒரு தொலைக்காட்சிப் படத்திற் காண்கிறீர்கள். லண்டன் குண்டு வெடிப்பினையடுத்து லெபனானிலிருந்து இவருமமேலும் பத்து இஸ்லாமியரும் நாடு கடத்தப்படுகின்றனர்.

(லண்டன்)

லண்டன் குண்டு வெடிப்புக்குப் பின் சர்வதேச பயங்கரவாதி ஓசாமா பின்லேடனை பாராட்டியும், பின்லேடன் தாக்குதலை நியாயப்படுத்திப் பேசிய தீவிரவாத ஆதரவு மதகுருவுக்கு இங்கிலாந்தில் வாழ்வதற்கான குடியுரிமை இரத்துச் செய்யப்பட்டது.

அவர் இங்கிலாந்தில் இருப்பது பொது மக்களின் நலனுக்கு ஏற்றது இல்லை என்று கூறி இந்தத் தடை உத்தரவை உள்துறை அமைச்சர் பிறப்பித்தார்.

இந்த நிலையில் கடந்த வாரம் அவர் இங்கிலாந்தில் இருந்து லெபனான் நாட்டுக்குச் சென்றார். அது தான் அவர் பிறந்த நாடாகும். அவர் லெபனான் சென்ற பின் அவருக்கு அந்த நாட்டு அரசும் தடைவிதித்தது இந்த நிலையில் லெபனானில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



ஜப்பான், சீனா, அமெரிக்கப் படைகளிற்கிடையில் இரண்டாம் உலகப்போரில் தாக்குதலில் ஈடுபட்ட யப்பார் பைற்றர் விமான மாதிரி ஒன்று பீஜிங் விமானத்தள நூதனசாலையில் வைக்கப் பட்டுள்ளது அதை சீன இளைஞர்கள் தொட்டுப் பார்த்து சந்தோசத்தைப் பரிமாறுகின்றனர்.


# அமெரிக்க உளவு விமானம் மொசூலில் வீழ்ந்து நொருங்கியது

(மொசூல்)

ஈராக்கில் மொசூல் நகரில் ஆள் இல்லாத அமெரிக்க உளவு விமானம் திடீரென்று கீழே விழுந்து நொருங்கியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழப்பு ஏதும் இல்லை, யாருக்கும் காயமும் ஏற்படவில்லை. பொருட்களுக்கும் எந்தச் சேதமும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

உடைந்து நொருங்கிய விமானத்தின் பாகங்களை உள்ளூர் மக்கள் தூக்கிச் சென்றுவிட்டதால் அதைக் கைப்பற்ற முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.



நியூயோர்க்கில் அமைந்துள்ள இரு தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையில் அதனை கடந்து செல்லும் பாதசாரிகள்.

# காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணாத வரை இந்தியாவுடன் தாராள வர்த்தகம் இல்லை

(ஹொங்கொங்)

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாதவரை இந்தியாவுடன் தாராள வர்த்தக உறவை பாகிஸ்தான் வைத்துக்கொள்ளாது என்று பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அசீஸ் கூறியுள்ளார்.இது தொடர்பாக ஹொங்கொங்கில் சவுகத் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் இந்தியா-பாகிஸ்தான் இடையேயுள்ள பிரச்சினைகளில் ஏற்படும் முன்னேற்றத்துக்குஏற்ப இந்தியாவுடன் தாராள வர்த்தகமும், முதலீடும் வளர வேண்டும்.

**சவுகத் அசீஸ்**

குறிப்பாக. காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத வரை இந்தியாவுடன் தாராள வர்த்தகத்தை பாகிஸ்தான் வைத்துக் கொள்ளாது. காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுவிட்டால், இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தக உறவில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்றார்.



ஒரு நாளைக்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் வந்து செல்வதால் எப்போதும் பரபரப்புடன் காணப்படும் லண்டன் ஹீத்ரோ விமான நிலையம் நேற்று முன்தினம் வெறிச்சோடியது. உணவு பரிமாறும் நிறுவனத்திலிருந்து ஊழியர்கள் சிலர் நீக்கப்பட்டதைக் கண்டித்து விமான நிலைய ஊழியர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டதால் ஏராளமான விமானங்கள் இரத்து செய்யப்பட்டன. விமானங்களை தரிப்பிடத்திற்குச, கொண்டு செல்ல முடியாததால் ஓடு பாதையிலேயே நிறுத்தி வைக்கப்பட்டன.

# செவ்வாய்க் கிரகத்துக்கு ரொக்கெட் நாசா வெற்றிகரமாக அனுப்பியது

செவ்வாய்க் கிரகத்திற்கு. அமெரிக்கா ரொக்கெட்டை நேற்று முன்தினம் வெற்றிகரமாக அனுப்பிவைத்தது.

விண்வெளி ஆய்வுக்காக அமெரிக்கா அனுப்பிய 'டிஸ்கவரி' விண்கலம் சமீபத்தில் வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியதைத் தொடர்ந்து செவ்வாய்க் கிரக ஆராய்ச்சிக்காக புதிய ரொக்கெட் ஒன்றை அனுப்ப அமெரிக்கா முடிவு செய்தது.

கடந்த புதன்கிழமை புறப்படுவதாக இருந்த இந்த ரொக்கெட் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக இரண்டு நாட்கள் தள்ளி வைக்கப்பட்டது. இந்திய நேரப்படி நேற்று முன்தினம் மாலை 5-13மணிக்கு புளோரிடாவின் கேப்கேனர் ஏவு தளத்தில் இருந்து வெற்றிகரமாகப் பறந்தது.

செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான அறிகுறிகள் ஏற்கனவே நடைபெற்ற ஆய்வில் தெரியவந்துள்ள நிலையில் 25 மாத காலம் விண்வெளியில் பறக்கும் இந்த ரொக்கெட், செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருப்பது பற்றியும், உயிரினங்கள் வாழ முடியுமா? என்பது பற்றியும் தொடர் ஆராய்ச்சிகளை மேற் கொள்ளும்.

வருங்காலத்தில் செவ்வாய்க் கிரகத்தில் விண்கலங்கள் இறங்குவதற்கான இடம் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்படும். தண்ணீருடன் தொடர்புடைய தாதுப்பொருட்கள், வெப்பநிலை, தூசுகள் பற்றியும் ரொக்கெட்டில் பொருத்தப்பட்டுள்ள நவீன கருவிகள் மூலம் ஆய்வு நடத்தப்படும்.

ரொக்கெட்டில் பொருத்தப்பட்டுள்ள சக்தி வாய்ந்த மூன்று கமராக்களில் ஒன்றில் மிகத் துல்லியமான 'லென்ஸ்' பொருத்தப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிரகத்தில் தரைப்பகுதி மற்றும் பாறைக ளின் சிகரப்பகுதி ஆகியவற்றை படம் பிடித்து அந்த கமரா 'நாசா' விஞ்ஞானிகளுக்கு அனுப்பும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



பாக்தாத்தில் கார்க்குண்டுத் தாக்குதலில் காயமடைந்து இறப்பை நெருங்கிக் கொண்டிருக்கும் ஒருவரின் நாடித் துடிப்பை வைத்தியர் உணர்கின்றார்.

# பில்கேட்ஸ் இந்தியா வருகிறார்

மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் தலைவர் பில்கேட்ஸ் இந்தியா வரத்திட்டமிட்டுள்ளார். டிசம்பர் மாதம் அவர் இந்தியா வருவார் எனத் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அவரது சுற்றுப் பயணத் திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. டில்லி, பெங்களூர், ஐதராபாத் நகரங்களில் அவர் சுற்றுப் பயணம் செய்வார். இந்தத் தகவலை மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் இந்தியத் தலைவர் வெங்கடேசன் தெரிவித்தார். பில்கேட்ஸ் இந்தியா வருவது இது நான்காவது தடவையாகும்.

# தேறாங்கண்டல் -கொக்காவில் பிரதானவீதி சீரின்மையால் போக்குவரத்து பாதிப்பு

## -புனரமைப்பு வேலைகள் தடைப்பட்டன

(மல்லாவி)

***துனுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேறாங்கண்டல் தொடக்கம் கொக்காவில் வரையிலான பிரதான வீதி குன்றும் குழியுமாக இருந்து வருவதால் அப்பகுதி புனரமைப்பு வேலைகள் தடைப்பட்டுள்ளன.***

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:அங்கு நிர்மாணிக்கப்படுகின்ற 25 வீட்டுத் திட்டத்திற்கு வவுனியாவிலிருந்து 6000 ஓடுகளுடன் சென்ற பார ஊர்தி பாதை சீரின்மையால் திரும்பிச் சென்றது. இதனால் மேற்படி கிராம மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

மேற்படிதேறாங்கண்டல் கிராமத்தில் நேப்திட்டத்தின் கீழ் வறிய மக்களுக்கான 25 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவ் வீடுகளுக்கான 6000 ஓடுகளை ஏற்றிச் சென்ற பார ஊர்திகளே பாதை சீரின்மையால் திரும்பிச்சென்றன. இச்சம்பவத்தால் மக்கள் கவலை அடைந்துள்ளனர். (24)

# முல்லை.கிளி மாவட்டங்களுக்கான பயிற்சித்திட்டங்கள் பற்றி ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

சனாதிபதி செயலகத்தின் பதினெட்டு கோடி ரூபா நிதியிலான பயிற்சித் திட்டங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பயிற்சித்திட்டங்கள் குறித்த விரிவான ஆராய்வு கிளிநொச்சி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்றுள்ளது

வடக்கு கிழக்கு மாகாணசபை கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளர் விசுவலிங்கம் அவர்களால் இது தொடர்பான கருத்துக்கள் முன்வைககப்பட்டன.

கடந்த புதன்கிழமை அரசாங்க அதிபர் இராசநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதித்திட்டமிடல் பணிப்பாளர்கள் உட்பட பயிற்சி திட்டங்களை மேற்கொள்ளும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளும், திணைக் களங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (கு)

# தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கல்

கியூடெக் நிறுவனத்தால் வழங்கப்பட்டுவரும் தொண்டர் ஆசிரியர் களுக்கான இம்மாதக் கொடுப்பனவு கீழ்வரும் திகதி ஒழுங்குகளில் அந்தந்த கோட்ட அலுவலகங்களில் வழங்கப்படுமென கியூடெக் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். நாளை புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று கோட்டங் களிலும், செவ்வாய் 16 ஆம்திகதி ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு கோட்டங்களிலும், புதன் 17 ஆம் திகதி கரைச்சி கோட்டத்திலும், வியாழன் 18 ஆம் திகதி கண்டாவளை கோட்டத்திலும், வெள்ளி 19 ஆம் திகதி பூநகரிக் கோட்டத்திலும் வழங்கப்படும்.

# முல்லைத்தீவுப் பிரதேசத்திலுள்ள மாதர் சங்கங்களுக்கான கலந்துரையாடல்

முல்லைப்பிரதேசத்திலுள்ள அனைத்து மாதர்சங்கங்களுக்குமான சிறப்புக்கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைச்செயலகத்தில் கடற் புலிகளின் முல்லை.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொறுபபாளர் மா.ரங்கன் தலைமையில் நடைபெற்றது.

மாதர் சங்கங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் மகளிர் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பாகவும் திட்டமிடல் செயலகப்பொறுப்பாளர்களில் ஒருவரான மதி கருத்துரை வழங்கினார்.

இதில் சுனாமி செயலகப் பொறுப்பாளர் மதி த.பு.க.பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் பெருமளவான மாதர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அறிமுகவிழா

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் எழுத்துருவாக்கத்தில் அமைந்த "நெஞ்சு கனக்கும் நினைவுகள்''கவிதைத்தொகுப்பு நூலின் அறிமுகவிழா இன்றையதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி இணையத்தளத்துள் நுழைந்தது




புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி இணையவலை அமைப்பில் www.mu-pcc.com எனும் முகவரியில் இணைந்துகொள்ளுகின்றது. இதனைப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ. தயானந்தா அவர்கள் பொன்விழா நிகழ்வின்போது ஆரம்பித்து வைத்தார்.(படப்பிடிப்பு-க.தவரட்ணம்)

# மகாகும்பாபிஷேகம்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு அருள்மிகு சிறிகந்தசுவாமி கோவில் புணராவர்த்தன பிரதிஷ்ட நவகுண்ட மகாகும்பாபிஷேகம் எதிர் வரும் 22ஆம் திகதி அன்று காலை நடைபெறவுள்ளது. கிரியைகள் 18ஆம் திகதி பி.ப நான்கு மணிக்கு ஆரம்பமாகும். எண்ணெய்க்காப்பு 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிமுதல் இடம் பெறும் மகாகும்பாபிஷேகம் 22ஆம் திகதி இடம் பெறும். (08)

# கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

தேசிய அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்

எட்வேட் சிவலிங்கம் ஆனைவிழுந்தான் வன்னேரிக்குளம் எனும் முகவரியைச்சேர்ந்த 772803945v எனும் இலக்கமுடைய அடையாள அட்டையே கண்டெடுக்கப்பட்டுள்ளது. (கு)

# தளிர் சேமிப்புக் கணக்கு குறித்து மாணவர்களுக்கு விளக்கம்

(அலுவலக செய்தியாளர்)

தளிர் சேமிப்புக் கணக்கினை விரிவுபடுத்தும் நோக்குடன் கிராமிய அபிவிருத்தி வங்கியினரால் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களுக்கு தளிர் சேமிப்புக் கணக்குப் பற்றிய விரிவான விளக்கம் ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி



வங்கியின் மத்திய பிரிவு மேலாளர் சுதர்சன் அவர்களால் தளிர் சேமிப்புக் கணக்கு மற்றும் முதலீட்டு சேமிப்புக் கணக்குகள் பற்றியும் விளக்கமளிக்கப் பட்டன. கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் தளிர் சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்துள்ள நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களும் மற்றும் ஏனைய மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர். மேற்படி பாடசாலையின் மாணவர் களை முழுமையாக இக்கணக்கின் கீழ் உள்வாங்கும் நோக்கிலேயே இக்கருத் துப் பகிர்வு நடைபெற்றுள்ளது. (கு)

# முத்துஐயன்கட்டு வலதுகரை அ.த.க பாடசாலை மாகாணமட்டப் போட்டியில் வெற்றி

கடந்த ஏழாம் திகதி வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற வடக்கு கிழக்கு மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டியில் வில்லிசை நிகழ்வில் கலந்து கொண்ட மு/முத்து ஐயன்கட்டு வலது கரை அ.த. க. பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற மாவட்ட மட்ட நிகழ்வில் மேற்படி பாடசாலை வில்லிசைப் போட்டி நிகழ்வில் முதலாம் இடத்தினையும் நாடக நிகழ்வில் பல போட்டிகளிற்கு மத்தியில் இரண்டாம் இடத்தினையும் பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வெற்றிபெற்றுத் திரும்பிய மாணவர்களை பாடசாலை நிர்வாகத்தினர் பாராட்டி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

# பெ.அ.பு.நிறுவனத்தால் சுயதொழில் முயற்சிக்கான கடன்

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் சுயதொழில் முயற்சிக்கான கடனுதவி வழங்கும் நிகழ்வு இயக்கச்சி கிராம சனசமூக நிலையத்தில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன பளைப் பிரதேச இணைப் பாளர் சசிரேகா தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் பெ.அ.பு. நிறுவனப் பணிப்பாளர் மா. வினோ திட்ட செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதுடன், இயக்கச்சி கிராமத்தில் 11 பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்பு, வியாபாரம், கைத் தொழில் போன்ற தொழில்களுக்கு இரண்டு இலட்சத்து 20 ஆயிரம்ரூபா கடன் வழங்கப்பட்டது.

# பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் குழு மோதலில் மூவர் காயம்

## மூவர் பொலிசாரால் தேடப்படுகின்றனர்

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் இளைஞர் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக மூன்று பேர் காயம் அடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மூன்றுபேரினை வவுனியாப் பொலிசார் தேடி வருகின்றனர். நேற்று முன்தினம் அதிகாலை இப்பகுதி இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து பொலிசார் வானத்தினை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து நிலைமையினைக் கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து அசம்பாவிதம் எதுவும் இடம்பெறாமல் இருப்பதற்காக வவுனியாப் பொலிசார் இரவு மேலதிக பொலிசாரினை அப்பகுதிக்கு அனுப்பியுள்ளனர் என்றும் காலையில் நடைபெற்ற அசம்பாவிதத்தினைத் தவிர வேறு சம்பவங்கள் இடம் பெறவில்லை என்று வவுனியாப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (21)

# விஞ்ஞான வினாடி வினாப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் விபரம்

கடந்த 11ஆம் திகதி அன்று கிளிநொச்சி வலய மட்டத்தில் இடம்பெற்ற விஞ்ஞான வினாடி வினாப்போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

**தரம்-06இல்**

ச.பானுப்பிரியன் கிளி/ கிளிநொச்சி ம.வி.- முதலாமிடம், மு.டிசாந்தினி கிளி/திருவையாறு ம.வி. -இரண்டாமிடம், ச.மிதுர்ஷன்- கிளி/திருவையாறு ம.வி. மூன்றாமிடம்

**தரம்-07இல்**

ச.வேனிலன் கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி- முதலாமிடம், தே.மெடோனாகர்ஷாலினி கிளி/புனிததிரேசா பெண்கள்கல்லூரி இரண்டாமிடம், சி.ஹெல்சிகா கிளி/ புனிததிரேசா பெண்கள் கல்லூரி மூன்றாமிடம்.

**தரம்-08இல்**

அ.ஆருத்திரன் கிளி/கிளிநொச்சி ம.வி.-முதலாமிடம், ஜெ.சத்தியஜீவிதா கிளி/அக்கராயன் ம.வி.இரண்டாமிடம், ம.மோகனா கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. மூன்றாமிடம்.

**தரம்-09இல**

தி.கீதாலயன் கிளி/கிளிநொச்சி ம.வி-.முதலாமிடம், தி.ஸ்ரீரஜீவினி கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி இரண்டாமிடம், தி. றொசாந்தினி.கிளி/கிளிநொச்சி ம.வி. மூன்றாமிடம்.

**தரம்-10இல**

சி.சர்வேஸ்வரி கிளி/புனித பற்றிமா றோ.க.வி. முதலாமிடம், யே.ஜெனிற்றா கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி இரண்டாமிடம், சூ.சுரேக்கா கிளி/வட்டகச்சி ம.வி. மூன்றாமிடம்

**தரம்-11இல்**

பா.தனதீபன் கிளி/ கிளிநொச்சி ம.வி. முதலாமிடம், கு.ஷோபிஜா கிளி/கிளிநொச்சி ம.வி. இரண்டாமிடம் பா.மயூரன் கிளி/கறுக்காய்த்தீவு ம.வி. மூன்றாமிடம். ஆகிய மாணவர்களின் பெயர்களை வலயக்கல்விப் பணிமனை வெளியிட்டுள்ளது.

# வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு செல்வோர் மீது படையினர் தீவிர கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

**வரலாற்றுப் பிரசித்திபெற்ற பொன்னாலை சிறிவரதராஜப் பெருமாள் ஆலயத்திற்குச் சென்று வருவோர் மீது கடற்படையினர் தீவிரகெடு பிடிகளை மேற்கொண்டுவருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பொன்னாலை, மூளாயப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் கடற்படையினரே இவ்வாறு பக்தர்கள் மீது கெடுபிடிகளைப் பிரயோகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் ஆலயப்பகுதிக்கான சீரானபோக்குவரத்திற்கு அனுமதித்த கடற்படையினர் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முன்னிருந்த சூழல போன்று இவ்வருடம் வீதிகளுக்கு குறுக்காக பெரிய முட்கம்பிச் சுருள்களைப் போட்டு ஒடுங்கியபாதை ஒன்றினூடாகவே பக்தர்களை ஆலயம் செல்ல அனுமதித்து வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆலயகொடியேற்ற தினமான கடந்த வியாழக்கிழமை ஆலயத்திற்குப் பெருமளவில் பொதுமக்கள் சென்றிருந்தனர்.

முன்னரங்க காவலரணில் இருந்த கடற்படையினர் ஆலயத்திற்கு வந்த பொதுமக்களை இடைமறித்து அவர்கள் வந்த வாகனங்களை காவலரணுக்கு வெளியே நிறுத்திவிட்டு கால்நடையாக ஆலயத்திற்குச் செல்லுமாறு வற்புறுத்தி அனுப்பினர்.

குறிப்பிட்ட முன்னரங்க காவலரணில் இருந்து ஆலயம் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது. இவ்வாலயத்திற்கும் பாதைக்கும் இடையே வெய்யிலில் கால்நடையாக நடந்து செல்ல முடியாத நிலையிருப்பதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (33)

## மீசாலை, சரசாலை, அல்லாரைப் பகுதியில் படையினரின் ரோந்து அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மிருசுவிலில் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து தென்மராட்சியில் பல இடங்களில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையினைத் தீவிரப்படுத்தியுள்ளனர் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். படையினர் எப்பொழுதும் ஆயுதங்களுடன் ரோந்தில் ஈடுபடுவதாகவும், மீசாலை, சரசாலை, அல்லாரைப் பகுதி இளைஞர்கள் மீது இரவு, பகல் வேளைகளில் உடற்சோதனைகளையும் மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இணுவில் மிருசுவில் சம்பவங்களையடுத்து ஆயுதங்களின்றி தமது முகாம்களை விட்டு வெளியேற வேண்டாம் என சிறிலங்கா இராணுவ அதிகாரிகளினால் படையினருக்கு எச்சரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புனரமைக்கப்படாத நிலையில் உதயசூரியன் சனசமுகநிலையம்

(கைதடி)

கைதடி மத்தி உதயசூரியன் சனசமுக நிலையத்தைப் புனரமைக்க நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையென சனசமுக நிலைய நிர்வாகிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த காலயுத்த நடவடிக்கையினால் இந்த சனசமுகநிலையம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனைப் புனரமைத்து மக்கள் பாவனைக்கு வழங்குவதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உரும்பிராய் பகுதியில் பணம் நகை திருட்டு

(கோப்பாய்)

யாழ்.உரும்பிராய் மூன்று கோவில் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து 11 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் நகைகள் என்பன திருட்டுப் போயுள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை நடைபெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் பணமாக ஐந்து இலட்சம் ரூபாவும் திருடப்பட்டுள்ளதாக யாழ்.கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் உறக்கத்தில் இருந்த வேளை வீட்டு யன்னல் கம்பிகளை உடைத்து உள்ளிறங்கிய திருட்டுக்கும்பல் ஒன்றே இத்திருட்டில் ஈடுபட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்.கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி சிறிசெல்வம் கூறியுள்ளார். (33)

## அடுத்த மாதம் தொடக்கம் சிற்றூர்தி தரிப்பிடம் முற்றவெளியில்

யாழ். நகர சிற்றூர்திகள் தரிப்பிடம் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் முற்றவெளிப்பகுதிக்கு மாற்றம் செய்யப்படுமென்று யாழ். மாநகரசபை ஆணையாளர் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

யாழ். நகர சிற்றூர்திகள் தரிப்பிடத்தை மாநகர சபையினர் முற்றவெளிப்பகுதியில் நிர்மாணித்து வருகின்றனர்.மாநகர சபையின் திட்டப்படி இம்மாதம் நடுப்பகுதியில் இருந்து சிற்றூர்தித்தரிப்பிடம் முற்றவெளிக்கு மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

எனினும் யாழ். மாநகரசபை ஆணையாளரை நேரில் சந்தித்த யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவையாளர் சங்கப்பிரதிநிதிகள் சிற்றூர்தித் தரிப்பிடத்துக்கான அடிப்படை வசதிகள் எதுவும் பூர்த்தியாகாத நிலையில் அங்கு சிற்றூர்தி தரிப்பிடத்தை கொண்டு செல்வது சாத்தியம்இல்லை என்பதைச்சுட்டிக்காட்டி முற்றவெளியில் அமையும் சிற்றூர்தி தரிப்பிடத்தில் சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரினர்.

இதைத் தொடர்ந்து சிற்றூர்திச் சேவையாளர்களது கோரிக்கைக்கு ஏற்ப அடிப்படை வசதிகளுடன் கூடியதாக முற்ற வெளியில் புதிய சிற்றூர்தித்தரிப்பிடம் அமைக்கப்பட்டு அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் அங்கு சிற்றூர்தி தரிப்பிடத்தை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (33)

## நல்லின கால்நடைகளை அழிப்போருக்கு எதிராக நடவடிக்கை

யாழ்.குடாநாட்டில் நல்லினக் கால்நடைகளை இறைச்சியாக்குவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் இறைச்சிக் கடைகளில் பசுமாடுகள் வெட்டுவது அதிகரித்திருப்பதாகவும் மற்றும் நல்லின கால்நடைகள் இறைச்சிக்காக அழிக்கப்பட்டு வருவதாகவும் இலாபம் கருதி சட்டவிரோதமாகக் கால்நடைகளை அழித்து வரும் இறைச்சிக்கடைகள் தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து ஏராளமான முறைப்பாடுகள் தமக்குக்கிடைத்து வருவதாகவும், இது தொடர்பான முறைப்பாடுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அக்கடைகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. (28)

## பால்கொள்வனவு விற்பனை நிலையம் வட்டுக்கோட்டையில் அமைப்பு

(வட்டுக்கோட்டை)

யாழ்.மாவட்ட தமிழீழ பொருண்மிய நிறுனத்தின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டையில் பால்கொள்வனவு விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கால்நடை வளர்ப்போர் மற்றும் பொதுமக்களின் வேண்டுகோள்களுக்கு இணங்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இந்நடவடிக்கையை எடுத்துள்ளது. (28)

## உரிமம் பெறாதோர் மீது வழக்குத்தாக்கல்

(வலி மேற்கு)

வலி தென் மேற்கு- மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப-அலுவலக எல்லைப்பகுதிக்குள் உரிமம் பெறாது வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த ஏழு பேருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்கு ஒன்றை ஆனைக்கோட்டை உப-அலுவலகப்பொறுப்பதிகாரி எஸ்.குலசிங்கம் தாக்கல் செய்துள்ளார்.

இவ் ஏழுபேரையும் இம்மாதம் 25 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டிருக்கின்றது.

நடப்பாண்டுக்கான வியாபார உரிமத்தை இதுவரையில் பெற்றுக்கொள்ளாத வியாபாரிகள் உடனடியாக பிரதேசசபைக்குச் சென்று உரிமத்தைப்பெற்றுக்கொள்ளுமாறும் தவறின் சம்பந்தப்பட்ட வியாபாரிகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் பிரதேச சபை அறிவித்துள்ளது. (37)

## புதிய நிர்வாகம் தெரிவு

திருநெல்வேலி மேற்கு கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட தலங்காவல் பிள்ளையார் கோவிலடி கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவும் இன்று முற்பகல் பத்து மணிக்கு ஆலயமண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (37)

## சுத்திகரிப்பு தொழிலாளர் மீண்டும் பணியில் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையால் கடந்த மூன்று வருடங்களாக தற்காலிக சுத்திகரிப்புப் பணியாளர்களாக பணியாற்றிவந்த சுத்திகரிப்புப்பணியாளர்கள் இருபத்தொருபேரை மீண்டும் பணியில் அமர்த்த யாழ்.மாநகரசபை ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

கடந்த சில வாரங்களாக மாநகரசபை ஆணையாளருக்கும், தொழிலாளருக்கும் இடையே நிலவிவந்த பிரச்சினை யாழ்.மாவட்ட அரசியல் துறையினரின் தலையீட்டால் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது. இதனையடுத்து இடைநிறுத்தப்பட்ட இருபத்தொரு சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் மீண்டும் பணிக்கு அமர்த்தப்பட்டனர்.(28)

## சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் விபத்து; கல்வியற் கல்லூரி மாணவி காயம்

(நமது நிருபர்)

சாவகச்சேரி பேருந்துநிலையத்திற்குள் கன்ரர் வாகனம் புகுந்ததில் ஏற்பட்ட விபத்தில் மாணவி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக்காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் பேருந்துக்காக காத்திருந்த வவுனியா கல்வியியற் கல்லூரி மாணவியான சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த சிவகுருநாதன்



சிவவதனி (வயது-26) என்பரே படுகாயமடைந்து யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ)

## காணிப்பிரச்சினை குறித்த விசாரணைக் கூட்டம்

கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவிலடங்கும் தொகுதிப் பண்ணைக் காணியின் அபிவிருத்திப் பிரச்சினை குறித்த விசாரணைக் கூட்டம் அடுத்த மாதம் முதலாம் திகதி கோப்பாய் மத்தி சனசமூக நிலையத்தில் நடைபெறும் என்று யாழ்.துரித காணி செயலக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தொகுதிப்பண்ணையில் உள்ள காணிகள் உரிய முறையில் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்து வருகின்றமை குறித்து துரித காணிச் செயலணியின் ஆணையாளர் கு.ஞானசேகரனின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காணி உரிமையாளர்கள் தமது காணி குறித்து கிராமஅலுவலர் ஊடாக பிரதேச செயலருக்கு முன் கூட்டியே தெரியப்படுத்தி கொள்ளுமாறும் அவ்வாறு செய்யத்தவறின் பிரதேச செயலரால் சம்பந்தப்பட்ட காணிகளின் உரிமைகள் இரத்துச் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (37)

## சட்டவிரோத பனை விற்பனைக்கு யாழ்.குடாநாட்டில் தடை

யாழ். குடாநாட்டில் உள்ள மரக்காலைகளில் சட்டவிரோதமான முறையில் பனைமரங்கள் விற்பனை செய்வது இந்த மாதம் தொடக்கம் தடை செய்யப்படுவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக யாழ். குடாநாட்டில் பல இடங்களில் அனுமதிகள் இன்றி பனைமரங்கள் தறிக்கப்படுவதுடன் விற்பனையும் செய்யப்பட்டு வருவதாகவும் கட்டுபாடுகள் இன்றி தொடரும் இச்சட்டவிரோத விற்பனை நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.(28)

## ஆசிரியர்களுக்குக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடன் பெற விண்ணப்பித்த ஆசியர்களது விண்ணப்பங்கள் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுப்பதில் காலதாமதம் செய்யப்பட்டு வருவதாக குடாநாட்டு ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

கடன் பெற விண்ணப்பித்து மூன்று மாதங்கள் கடந்து விட்ட பின்னரும் உரிய நடவடிக்கைகளுக்காக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படாமல் கல்வி வலயங்களில் தேங்கிக்கிடப்பதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பேரினவாதிகளின் கொடூர ஒடுக்குமுறையே பெண்களைப் போராட்டத்தில் இணையத் தூண்டியது

## 20 ஆம் ஆண்டு நிறைவில் மகளிர் படையணி....



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் மகளிர்படையணி உருவாக்கம்பெற்று, வரும் 18ஆம் திகதிஇருபது ஆண்டுகளை எட்டிடும் நிலையில் உலகத்தில் வாழ்கின்ற பெண் சமுதாயத்திற்கெல்லாம் முன்னுதாரணமாகவும் வழிகாட்டும் வரலாறுகளாகவும் இன்று ஈழத்தமிழ் பெண் சமூகம் விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கதே. இதற்குக் காரணம் தமிழீழ தேசியத் தலைவர் தீர்க்கதரிசனமாகவும் தூரநோக்கோடும் பெண்களையும் அமைப்பில் இணைத்துக்கொண்டமையே என்பதை எவராலும் மறுக்க முடியாது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் பெண்கள் இணைக்கப்படுவதற்கும், மகளிர் படையணிகள் துரிதகதியில் பரிணாம வளர்ச்சி நிலைகளை எட்டுவதற்கும் பெரும்பங்காற்றியவர்கள் சிங்களப் பேரினவாதிகளே என்பதும் வரலாறு பகர்கின்ற உண்மை.

எவ்வாறெனில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றம்பெற்ற காலத்தில் ஆண் போராளிகள் மட்டுமே தேசியத்தலைவருடன் இணைந்து செயற்பட்டனர். ஆனால் காலப்போக்கில் பேரினவாதிகள் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களும் பெண்கள் மீதான வன்செயல்களுமே ஈழத்தமிழ்ப் பெண்களை ஆயுதமேந்தத் தூண்டின பெண்கள் மீது இவர்கள் மேற்கொண்ட கொடூரங்களையும் ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து பதிலடி கொடுத்தால் மட்டுமே தமிழ்ப் பெண்கள் தலைநிமிர்ந்து வாழமுடியும் என்ற நிலைக்கு தமிழ்ப் பெண்கள் தள்ளப்பட்டனர்.

சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிராக ஆயுதமேந்திப் போரிடுவதற்கு முன்னரான காலப்பகுதிகளில் கூட சமுதாயத்தில் இருந்தவாறே பேரினவாதிகளுக்கு எதிராக தமிழ்ப்பெண்கள் பலவாறான போராட்டங்களில் ஈடுபட்டும், சமுதாயப்பணிகளில் தம்மை ஈடுபடுத்தியும் வந்துள்ளனர்.

அதாவது இலங்கை அரசியலில் தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்ற காலத்திற்கு முன்பிருந்தே பெண்கள் சமூகப் பணிகளிலும், இனவாதிகளுக்கெதிரான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

பின்னர் தமிழரசுக் கட்சி உருவாக்கம் பெற்ற காலப்பகுதியில் அக்கட்சியிலும் இணைந்து பெண்கள் இனவாதிகளுக் கெதிராக குரல் கொடுத்த வரலாறு ஈழத் தமிழ்ப் பெண்கள் வரலாற்றில் ஆழமாகப் பதிந்ததொன்று. அந்தவகையில் அன்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பெண்கள் அமைப்பின் உறுப்பினராகச் செயற்பட்டு பின் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து இனவாதிகளுக்கெதிராகப் போராடிவரும் போராளியும் தற்போதைய தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவைப் பொறுப்பாளரும் வைத்தியருமான தேவா அவர்கள் அக்காலத்தில் பெண்கள் எவ்வாறு போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பதையும் அக்காலத்தில் சமூகத்தில் இருந்தபடியே எவ்வாறு ஈழவிடுதலைக்கு பெண்கள் துணைநின்றார்கள் என்பதையும் இவ்வாறு கூறினார்.



தேவா அவர்கள்

“1967 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியில் உறுப்புரிமை பெற்றேன். இதன் காரணம், அக்காலத்தில் அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட எமது இன விடுதலைக்காக பேராட வேண்டும் என்பதற்காகவே. ஆகும். அக்காலத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியில் மகளிர் அமைப்பும் இருந்தது. அந்த மகளிர் அமைப்பின் கிளையினை காங்கேசன்துறையில் நிறுவி அதனூடாக சாத்வீகப் போராட்டங்களை நடத்தி வந்தோம். அன்றைய காலத்தில் பெண்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது விமர்சனத்திற்குரியதாகவே இருந்தது. ஆனால் நாங்கள் அவற்றையெல்லாம் உடைத் தெறிந்து செயற்பட ஆரம்பித்தோம். அத்தோடு சமூகத்தில் பெண்களுக்கான கைத்தொழில்களை ஆரம்பித்து செயற்படுத்தினோம். அத்தோடு சமூகத்தில் நிலவிய சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகவும் செயற்பட வேண்டியிருந்தது. இவ்வாறு செயற்பட்டவேளை தமிழரசுக் கட்சி கூட்டணியாக உருப்பெற்றது. பின்னர் நாம் ஆயுதம் ஏந்தியே தீரவேண்டும். அதன் மூலம் தான் எமது விடுதலையை வென்றெடுக்க முடியும் என்ற நிலை உருவாகும் அளவுக்கு தமிழ்ச் சமூகத்தின் மீது பேரினவாதிகளின் அடக்குமுறைகள் முனைப்புப் பெறத் தொடங்கியதால் நான் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டேன்” எனக்கூறினார்.

தமிழினம் சிங்கள இனத்தினரால் ஒடுக்குமுறைகளுக்குட்படுத்தப்பட்ட வேளையில் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைவருமே ஒடுக்கப்பட்டதனால் ஆண்களைப் போலவே பெண்களும் போராட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இயல்பாகவே உருவானது. இவ்வாறான நிலையில் கல்வி ரீதியாகவும் ஒடுக்கு முறைகளை எதிர்கொண்டு பின் அவற்றுக்கெதிராகப் போராட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்துகொண்ட மூத்தபெண் போராளியும் தற்போதைய காந்தரூபன் செஞ்சோலை சிறுவர் இல்ல பொறுப்பாளருமான ஜனனி, தான் போராட்டத்தில் இணைவதற்கான காரணம் இவ்வாறுதான் உருவானது எனக் கூறுகிறார்.

“சிறுவயதிலிருந்தே இனக்கலவரங்களை கேள்விப்பட்டு வந்தேன். அதாவது 1958 இனக்கலவரம், 1967 சத்தியாக்கிரகம் ஆகியவற்றைப் பற்றிய கதைகளைக் கேட்டு வந்த நான் 1971 ஆம் ஆண்டு தரப்படுத்தல் காலத்திலே பாடசாலை மாணவியாக இருந்தேன். அதனால் தமிழ் மாணவர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலைகளை, பாதிப்புக்களை அறிந்திருந்தேன். 1974 அனைத்துலக தமிழராட்சி மாநாட்டிற்கு போய் வந்தேன். இறுதி நாள் இரவு எமது தமிழர்களுக்கு ஏற்பட்ட உயிர் இழப்புகளை நான் அறிந்து கொண்டேன். இதன்பின்னர் 1981 ஆம் ஆண்டு நாங்கள் கால்பதித்து நூல்களைப் படித்த நூலகம் எரிக்கப்படுகின்றது. தொடர்ந்து நான் 1981 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இணைந்து கற்று வந்தவேளை அங்கு சிங்களவர், தமிழர் என்ற வேறுபாட்டினை நாங்கள் தெளிவாக உணரக்கூடியதாகவிருந்தது. எவ்வாறெனில் மாணவர்களுக்கிடையே தேர்தல் நடைபெறும். போட்டியிடுகின்ற எல்லாக் கட்சிகளுக்கும் தமிழ் மாணவர்கள் ஆதரவு வழங்குவார்கள். இதிலே எந்தக் குழு வெற்றிபெற்றாலும் தோல்வியடைந்தவர்களால் தாக்கப்படுபவர்கள் தமிழ் மாணவர்களாகவே இருந்தார்கள். பல மாணவர்கள் அடிக்கப்பட்டு காயப்படுத்தப்பட்ட நிலையில் நாம் இங்கு திரும்பி வந்தோம். மீண்டும் சிறிலங்கா காவல் துறையின் பாதுகாப்பு வழங்குவதாகக் கூறியதன்பின் அங்கு சென்ற போதும் சிங்கள மாணவர்களாலும் கிராமத்துச் சிங்கள மக்களாலும் நாம் தாக்கப்படும் நிலை உருவாகியது. 1983 ஆம் ஆண்டு ஆனி மாதமளவில்



ஜனனி

மீண்டும் சிங்கள மாணவர்களால் தமிழ் மாணவர்கள் தாக்கப்பட்டதனால் நாம் அனைவரும் மீண்டும் திரும்பி வந்தோம். அந்தக் காலத்தில் சிங்களவர்களால் எமக்கு ஏற்பட்ட தாக்கங்களும், அவமானங்களும், ஏற்கனவே நாம் அறிந்த சம்பவங்களும் எமக்குள் ஒரு கோபத்தை உருவாக்கின. இக்கால கட்டத்தில் 1983 ஆடி இனக்கலவரம் ஆரம்பமாகியது. இந்த நிலையில் இடம்பெயர்ந்த அத்தனை மாணவர்களும் இணைந்து இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற அமைப்பை உருவாக்கினோம். அதனூடாக யாழ். பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே இருந்த துறைகளோடு ஏனைய துறைகளையும் உருவாக்கி அங்கே எங்களையும் உள்வாங்குமாறு நாங்கள் கோரிக்கையை முன்வைத்து பல கடிதங்களை அனுப்பியும் அரசாங்க மட்டத்திலிருந்து எந்தப்பதிலும் கிடைக்காததனால் எமது கோரிக்கையை முன்வைத்து அடையாள உண்ணா விரதத்தினை ஆரம்பித்தோம். அது ஏற்கப்படாததனால் சாகும் வரை உண்ணா விரதத்தில் ஈடுபட்டோம். ஆண் மாணவர்களுடன் நாம் இரண்டு பெண்களும் இணைந்து இவ்வுண்ணா விரதப்போராட்டத்தை ஆரம்பித்தோம். மறுநாள் யாழ். பல்கலைக்கழக மாணவிகள் இருவரும் எம்மோடு இணைந்து கொண்டனர். அக்காலப்பகுதியில் இனவாதிகளுக்கெதிராக பல்வேறு இயக்கங்களும் உருப்பெற்றுக் கொண்டிருந்தன, நாம் உண்ணாவிரதமிருந்த ஒன்பதாம் நாள் இராணுவம் பல்கலைக்கழகத்தை முற்றுகையிட்டு உள்நுழையலாம் என்ற நிலை இருந்தது. இந்த நிலையில் எம்மை காப்பாற்றுவதற்காக இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் தயாபரனும் யாழ். பல்கலை மாணவர் ஒன்றியத்தலைவர் சிறீஸ் கந்தராசாவும் எம்மோடு கதைத்து எம்மை வீட்டுக்குச் செல்லுமாறும், அல்லது இந்தியாவிற்கு அழைத்துச் சென்று எம்மை படிக்க உதவுவதாகவும் கேட்டனர். அதற்கிணங்க நாம் அனைவரும் இந்தியாவிற்கு செல்லச் சம்மதித்தோம். அன்று மாலை விடுதலைப் புலிகளின் பொறுப்பில் நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு சென்ற பின் அங்கிருந்த போராளிகள் எம்மோடு பழகியவிதம் எமக்கு நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. நாம் உடனடியாக இந்தியா செல்ல முடியாததனால் மூன்று நாட்கள் தாமதித்து நின்றோம். அப்போதும் அவர்கள் கேட்டார்கள். நீங்கள் வீட்டுக்கு செல்கிறீர்களா? என்று நான் அப்போது போராளியாக மாற வேண்டும் என உறுதியாகக் கூறினேன். பின் இந்தியா சென்றவுடன் சில நாட்களுக்கு பின் போராளியாவதானால் குடும்பத்தவரின் அனுமதியைப் பெறவேண்டுமெனக் கூறி எமது பெற்றாரை இந்தியா விற்கு அழைத்து வந்து எம்மை ஒப்படைத் தனர். அப்போது நான் போராளியாக வேண்டும் என்பதைக் கூறியதற்கு குடும்பத்தவர் சம்மதித்தனர். இதன் பின்பே நாங்கள் போராளிகளாக இணைத்துக் கொள்ளப்பட்டோம்” என்றார்.

இவ்வாறாக பெண் போராளிகள் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்துகொள்ள இந்தியாவில் திண்டுக்கல் சிறுமலைக் காட்டுப் பகுதியில் 1985 ஆம் ஆண்டு எட்டாம் மாதம் 18 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக பெண்களுக்கான பயிற்சி ஆரம்பிக்கப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினரின் படையத் தொடக்கப் பயிற்சிக் கல்லூரியில் முதலாவது அணிக்கான பயிற்சிக்காக கொடியேற்றிய பின்னர் விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்குபற்றுவதென்பது இயல்பானதொன்றாக மாறியது.

இவ்வாறு முதற் பயிற்சி பெற்ற பெண்கள் அணியினர் முதன்முதலாக இராணுவத்தினருக்கெதிரான தாக்குதலில் பங்குபற்றிய களமாக மன்னார் பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல் அமைய, தொடர்ந்து மன்னார் அடம்பனில் முன்னேறிய இராணுவத்தினரு



டனான தாக்குதல் எனத் தொடர்ந்தது. 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் இலங்கைக்கு வருவதற்கு முன் னர் முதலாவது பயிற்சியை முடித்த அணி களே களநடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தன. 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு வருவதற்கு சிறிது காலத்திற்கு முன்னரே மகளிர் அணியின் இரண்டா

**இ.சசிக்குமார்**

(07ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் போராட்டங்களுக்கு மதிப்பளிக்காவிடின் யுத்தத்தினூடாக தன்னாட்சி உரிமை பெறுவோம்

**- விசுவமடு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை அறைகூவல்**

**வரும் நாட்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் மக்கள் எழுச்சிப் போராட்டங்களில் கலந்துகொள்ளுமாறும் இப்போராட்டங்களூடாக தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையை சிறிலங்கா அரசு மறுத்தால் ஒரு யுத்தத்தினூடாக அதைப் பெற்றுக்கொள்ள இராணுவ ரீதியாக மக்கள் அனைவரும் தயாராக வேண்டுமென்றும் விசுவமடுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் அறைகூவல் விடுத்துள்ளனர்.**

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

எமது தலைவர் ஆயுத ரீதியாக ஆரம்பித்த போராட்டம் படிமுறை வளர்ச்சியாக பரிணாமம் பெற்று பல தியாகங்கள் புரிந்து, இன்று முடிவின் கட்டத்தில் எல்லாவற்றுக்கும், தயாரான பலத்தோடு நின்று கொண்டு தான் சிறிலங்கா அரசோடு சர்வதேசத்தின் அனுசரணையோடு பேசிக் கொண்டிருக்கின்றோம்.

இதனால் ஏற்பட்டிருக்கும், இந்த சமாதான காலத்தைப் பயன்படுத்தி எமது விடுதலைப் போராட்டத்தை அழித்து அல்லது, நசுக்கி இந்த போராட்டத்திலிருந்து மக்களைப் பிரித்து தங்களுடைய பெரும்பான்மையை நிறுவி தன்னுடைய ஆதிக்கத்தை செலுத்த முயல்கிறான் எதிரி. ஆகையால் இதனை ஏற்றுக்கொள்ள தமிழ் மக்கள் தயாராக இல்லை. சரியான ஒரு அடித்தளத்தை இட்டு இப்போராட்டத்தை முன் நகர்த்தி செல்லுகிறார் தலைவர் பிரபாகரன் அவர்கள். எனவே எமது உரிமையை எவ்வழியில் பெற்றுக்கொள்ள வேண்டுமோ அவ்வழியால் பெற்றுக் கொள்ள தமிழர்களாகிய நாம் தயாராகி விட்டோம். இதன் வெளிப்பாட்டை சர்வதேச உலகிற்கு தெரியப்படுத்த வேண்டும்.

இதனால் வரும் நாட்களில் மேற்கொள்ளப்படவிருக்கும், மக்கள் எழுச்சிப் போராட்டங்களில் அனைத்து, மக்களும் கலந்து கொள்வதோடு இந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் ஊடாக எமக்கான தன்னாட்சி உரிமையைசிறிலங்கா அரசு தரமறுத்தால் மீண்டும் ஒரு யுத்தத்தின் ஊடாக அதனைப் பெற்றுக் கொள்ள இராணுவ ரீதியாக எமது மக்கள் அனைவரும் தயாராக வேண்டும். இராணுவ ரீதியான பயிற்சிகளைப் பெற்று விடுதலைப் புலிகளின் பின்னால் அனைவரும் அணிதிரண்டு எம்மை எதிர்க்கின்றவர்களை அழிப்போம். அடிமைப்பட்ட தமிழினத்தை தலைநிமிர வைத்த எம்தலைவா, உரிமையை வென்றெடுக்கும் புனிதப் போரை உடன் தொடங்குங்கள். இதுவரை பொறுத்தது போதும். நாம் பொங்கி எழுவோம். தாயகத்தை மீட்டு சரித்திரம் படைப்போம். சந்ததியை வாழ வைப்போம். உடன் தயாராகி போர்ப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளவும், பாதுகாப்பு பயிற்சியைப் பெற்றுக் கொள்ளவும், உடன் தயாராகுமாறு விசுவமடுப் பிரதேச அனைத்து மக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (46)

# -சுனாமியால் பாதிக்கப்பட்ட- மீன் வியாபாரம் செய்வோருக்கு 10ஆயிரம் ரூபா மானியம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களில் கருவாடு பதனிடுதல் மீன்வியாபாரம் செய்ப வர்களுக்கு முல்லை கடற்தொழி லாளர் கூட்டுறவு சங்கசமாச ஆதர வில் ஒக்ஸ்பாம் நிறுவனத்தால் பத்தா யிரம் ரூபா மானியமாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக் கிழமை முல்லை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கசமாசத்தலைவர் மரியராசா தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் மங்கலவிக்கினை ஒக்ஸ்பாம் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் விஜயலட்சுமி மற்றும் தேவராசா ஆகியோர் ஏற்றினார்கள். தொடர்ந்து திட்டம் தொடர்பான விளக்கவுரைகளை மரியராசா ஒக்ஸ்பாம் திட்டஅலுவலர் செந்தில் குமரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து 101 பயனாளிகளுக்கான பணத்தை சமாசத்தலைவர் மரியராசா, சமாசத்தின் செயலாளர் பரமசிவம், கணக்காளர் எழிலரசி, ஒக்ஸ்பாம் பிரதிநிதிகள் ஆகியோர் வழங்கியுள்ளார்கள்.

மேற்படி நிதியானது செல்வபுரம்,மணற்குடியிருப்பு, ,வண்ணாங்குளம், கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடுதெற்கு, கோயிற்குடியிருப்பு ஆகிய எட்டு கிராமங்களைச்சேர்ந்த பயனாளிகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. (20)

# முள்ளியவளை உப அலுவலகத்தினால் வீதிகள், இடுகாடு புனரமைப்பு

(முள்ளியவளை)

கரைதுரைப்பற்று பிரதேசசபையின் முள்ளியவளை உப அலுவலகத்தினால் அப் பிரதேசத்திற்குட்பட்ட இரண்டு வீதிகளும், இடுகாடொன்றும் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

மேற்படி முள்ளியவளைப் பிரதேசத்திற்குட்பட்ட குமுழமுனை தங்கபுரம் வீதியும், நீராவிப்பிட்டி சிச்சிராபுரம் உள்ள வீதியும் முள்ளியவளை பொது இடுகாடும் இவ்வாறு புனரமைப்பு செய்யப்படவுள்ளது. (ஆ)

# பேருந்து சேவையில்லாது ஒட்டறுத்த குளம் மக்கள் அவதி

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளம் மாந்தை கிழக்கு பிரதேசத்தின் ஒட்டங்குளம் கிராமத்திற்கு பேருந்து சேவைகள் இன்றி மக்கள் அவதிப்படுகின்றனர். மேற்படி கிராமத்தில் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பேருந்து சேவைகள் இன்றி மக்கள் அவதிப்படுகின்றனர். அத்துடன் அயற்கிராமங்களான பூவரசங்குளம் கொம்பறுத்தகுளம் விநாயகபுரம் பகுதிகளில் வாழும் குடும்பங்களும் பியராணங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்து வருகின்றனர். தங்களின் அத்தியாவசிய தேவைக்கும் தூர இடங்களுக்கு பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டுமானால் எட்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மல்லாவி நகர் பகுதிக்கு நடந்து வருவதை காணகூடியதாகவுள்ளது.

இப்பகுதிக்கு நீண்டகாலமாக பேருந்து சேவையின்றி இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (24)

# கொழும்பு யாழ். இற்கு கிளியிலிருந்து அரிசி அனுப்ப அரச அதிபர் நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இரண்டு மாதங்களுக்குள் கொழும்பிற்கு 469 பாரவூர்திகளிலும், உலக உணவுத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்திற்கு 35 பாரவூர்த்திகளிலும் அரிசி அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிளி. மாவட்ட அரசாங்க அதிபர் அறியத்தந்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும் போகத்தில் விளைந்த நெல்லை வாங்கி ப.நோ.கூ.சங்கங்களும், தனியாரும் இதனைச் சந்தைப்படுத்த முடியாது நஷ்டத்தினை எதிர்கொண்டுள்ளனர். பெரும்போகத்தில் ப.நோ.கூ.சங்கங்கள் வாங்கிய 7215 மெற்றிக்தொன் நெல்லும் களஞ்சியங்களில் தேங்கியுள்ளது. அத்துடன் தனியார்துறை வாங்கிய 21000இற்கு மேற்பட்ட மெற்றிக்தொன் நெல்லும் தேங்கியுள்ளது.களஞ்சிய வசதியின்மை மற்றும் சந்தைப்படுத்தல் வசதியின்மை காரணமாக இவர்கள் பாரிய முதல் நட்டத்தினை எதிர்நோக்கியுள்ளனர். இதன் காரணமாக இவர்களால் சிறுபோகத்தில் விளைந்த 25ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை வாங்கமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையையிட்டு கடந்த நான்காம் திகதி நடைபெற்ற அரச அதிபர் மாநாட்டில் திறைசேரிச் செயலாளர் ஜே.பி.ஜெயசுந்தரவின் கவனத்திற்குக் கொண்டுவந்ததையடுத்தே கொழும்பிற்கு நெல் அனுப்ப ஏற்பாடாகியது.

இதன்படி 469 பாரவூர்தி அரிசியை இரண்டு மாதங்களுக்குள் கொழும்பிற்கு அனுப்பஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் 35 பாரவூர்தி அரிசியை உலக உணவுத் திட்டம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்ப ஏற்பாடாகியுள்ளது. அத்துடன்சிறுபோக விவசாயிகளிட மிருந்து குறைந்தளவு பத்து மூடைவீதம் நெல் கொள் வனவு செய்ய ஏற்பாடாகியுள்ளது. இதன் மூலம் விவசாயிகளிடமிருந்து நெல்விலை குறைந்தது மூடை 900இற்கு மேலாவது உயர்வதன் மூலம் அவர்கள் விவசாயிகள் நன்மையடைவர் என மாவட்டச் செயலகம் எதிர்பார்க்கின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மாருக்கு போசாக்கு உணவு வழங்கல்

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் கிராமங்கள் தோறும் மாதாந்தம் சத்துக்குறைந்த சிறார்களுக்கும் கர்ப்பிணித்தாய் மாருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இதன்போது தேறாங்கண்டல் கிராமத்தில் சத்துக்குறைந்த 112 சிறார்களுக்கும், கர்ப்பிணித்தாய் மார்களுக்கும் கடந்த இரண்டாம் திகதி காலை ஒன்பது மணிக்கு தேறாங்கண்டல் பொதுநோக்கு மண்டபத்தில் சுகாதார உதவியாளர் திருமதி வ.சுஜீவா சிகிச்சை வழங்கினார். அத்துடன் போஷாக்கு உணவான,சோழன்,சோயா திரிபோஷாமா வழங்கப்பட்டது. அத்துடன் ஐயன்கன்குளம் திலீபன் மருத்துவமனையினரால் மேற்படிக்கிராமத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. திலீபன் மருத்துவமனையின் மருத்துவ போராளி செல்வி.தா. கதிர்,செல்வி ஆகியோரால் இவ்வாறு பல நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. (24)

# முல்லை சாரண மாணவர்களின் பாசறை நிகழ்வுக்கு ஏற்பாடு

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் முல்லை மாவட்ட திரிசாரண அமைப்பினால் சாரணமானவர்கள் இணைந்த பாசறை நிகழ்வின் ஒத்திகை முல்லைத்தீவு வட்டுவாகல் ஆற்றங்கரையில் எதிர்வரும் 17, 18, 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இது எதிர்வரும் செப்டெம்பர் 21 தொடக்கம் 25 வரை அகில இலஙகை ரீதியில் நடைபெறவுள்ள இந்த பாசறை நிகழ்வின் முன்னோடியே இங்க நடைபெறவுள்ளதென திரிசாரண அமைப்பினர் தெரிவித்தனர்.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் சாரணப்பயிற்சி பெற்று சின்னம் பெற்றவர்களில் ஐந்து சாரணர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடியும் எனவும், எதிர்வரும் 15.08.2005 க்கு முன்பு முல்லை வலையப்பணிமனைக்கு உட்பட்ட அனைத்து அதிபர்களையும் வலையக்கல்விப் பணிமனையினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (20)

# நுளம்புவலை வழங்கல்

முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினர் சர்வோதய நிதியுதவியுடன் நிறுவனத்திற்கு உட்பட்ட ஒன்பது கிராமங்களுக்கு நுளம்புவலை கடந்த வாரம் வழங்கப்பட்டது.

ஒன்பது கிராமங்களில் 2600 குடும்பங்களுக்கு ஒரு நுளம்பு வலை வீதம் இப்பகுதி மக்களுக்கு நுளம்பின் தொல்லை அதிகமாக இருப்பதால் இந்த நுளம்புவலை பயன் அளிப்பதாக மக்கள் தெரிவித்தனர். (20)

## பேரினவாதிகளின்...

வது அணி பயிற்சியினை முடித்திருந்தது. இதற்கு அடுத்தடுத்த பயிற்சிப் பாசறைகள இந்திய இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக் காலத்திலும் அவர்கள் வெளியேறிய காலப்பகுதியிலும் துரிதகதியில் நடைபெற்று வந்தன.


இவ்வாறு 1990 இற்கு பின்னர் பெண்கள் போராட்டத்தில் இணைவது இயல்பான தொன்றாகிவிட்டது. அதாவது இந்திய இராணுவக் காலப்பகுதியானது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் மகளிர் அணியினரின் வளர்ச்சியில் ஒரு பாய்ச்சல் வளர்ச்சியை ஏற்படுத்தும் காலமென்றே கூறமுடியும். மிக அதிகளவான போர் அனுபவம் பெண்களுக்குக் கிடைத்ததும் இந்தக் காலப்பகுதியிலேதான். உலகத்தின் நான்காவது வல்லரசாக அக்காலத்தில் திகழ்ந்த இந்திய படைகளுக்கெதிரான போரில் பெண் போராளிகள் பங்கும் குறிப்பிடத்தக்க தொன்றாகவே இருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் கெரில்லா தாக்குதலில் ஈடுபட்ட அக்காலத்தில் நாடெங்கும் பரந்து நிலையெடுத்த இந்தியப்படைகளை சிறுசிறு கெரில்லா அணிகளாக பிரிந்து நடத்திய தாக்குதல்களில் ஆண்களுடன் இணைந்து பெண் போராளிகளும் பங்கு பற்றினர்.

இதன்பின்னர் மணலாற்றுப் பகுதியில் தமிழீழ தேசியத் தலைவருக்கு மிக அருகில் இருந்த காலப்பகுதியிலேயே மகளிர் படையணி பாரிய வளர்ச்சியைக் கண்டது. பல்வேறு படைப்பிரிவுகளை துறைரீதியாக பெண்போராளிகள் வளர்க்கப்பட்டனர். இதில் தேசியத்தலைவரின் நேரடி ஈடுபாடும் இருந்தது. பெண் போராளிகள் கனரக ஆயுதங்களைக் கையாள்வது கண்ணிவெடிப் பிரிவுகளை உருவாக்குவது போன்றவற்றில் பெண்களுக்கும் முக்கிய இடமளிக்கப்பட்டது.

இக்காலத்தில் குறிப்பிடத்தக்கதென்னவெனில் இந்தியாவில் வைத்து பெண்போராளிகளின் முதலாவது அணிக்கு மட்டுமே ஆண்போராளிகள் பயிற்சியளித்தனர். ஆனால் அதற்குப் பிந்திய அணிகளுக்கு பெண் போராளிகளே பெண்களுக்கு பயிற்சியளிக்கின்ற நிலைக்கு பெண் போராளிகள் வளர்ச்சி பெற்றிருந்தனர்.

இந்திய இராணுவம் நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் காட்டுக்குள்ளிருந்த விடுதலைப்புலிகள் நாட்டுக்குள் வந்தவேளை அதிகூடிய பெண்போராளிகளின் அணிகள் வரிச்சீருடை அணிந்த இராணுவமாக மக்கள் மத்தியில் தோன்றியமை சமூகத்தில் பாரிய வியப்பையும், விழிப்புணர்வையும், திருப்புமுனையையும் ஏற்படுத்தியது. 1990 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் பெண் போராளிகளின் வரலாற்றில் பாரிய திருப்புமுனை ஏற்பட்டகாலமாகக் கருத முடிகிறது. அதாவது இந்திய இராணுவத்துடன் போரிட்ட காலத்தில் ஆண் போராளிகளுடன் இணைந்து போரிட்ட பெண் போராளிகள் இப்போது தனித்து பிரதேசங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டு தாக்குத்ல்களில் ஈடுபடுத்தப்பட்டார்கள். பெண்களே காப்பரண்களை அமைத்து தலைமை தாங்கி தாக்குதல்களை நடத்தும் அளவிற்கு தேசியத் தலைவர் அவர்கள் பெண் போராளிகளுக்கு ஊக்கமும், பயிற்சியும்,பொறுப்புக்களையும் வழங்கியிருந்தார். அன்று பலாலி, யாழ். கோட்டை ஆகிய இராணுவ முகாம்களில் பெண்கள் இவ்வாறு தனித்து பிரித்து வழங்கப்பட்ட களங்களில் போரிட ஆரம்பித்தனர்.

தொடரும்....



சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து கொழும்பில் படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்படுவதைப் படத்தில் காணலாம்.

# அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்



1994 முதல் 2001 வரையும் பின்னர் 2004 ஏப்பிரல் முதலும் சந்திரிகாவின் அரசில் வெளிநாட்டமைச்சராகவும் சந்திரிகாவின் மிக்க நம்பிக்கைக்குரியவராகவும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இருந்து வந்துள்ளார். வெளிநாடுகளில் தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு பயங்கரவாத முத்திரை குத்தி அதற்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபடுவதே சந்திரிகாவால் இவருக்கு வழங்கப்பட்ட முக்கிய பணியாக இருந்தது.

எந்த ஒரு தேர்தல் மூலமாகவும் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படாத இவர், தமிழராக இருந்து கொண்டும் தமிழ்மக்களின் போராட்டத்திற்கு எதிர்ப்புக்காட்டியதால் தென்பகுதியில் இவருக்குப் பெரும் செல்வாக்கு ஏற்பட்டது.

கதிர்காமர் 1932 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி சாமுவேல் கதிர்காமர் பரிமலர் கதிர்காமர் தம்பதிகளின் புதல்வராக யாழ்.மானிப்பாயில் பிறந்தார்.

கண்டி திரித்துவக் கல்லூரியில் பயின்ற அவர், 1953 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கலைமாணிப்பட்டம் பெற்றார். 1955 இல் இலங்கை சட்டவாளர் சங்கத்தில் இணைந்தார். 1958 ஆம் ஆண்டு பிரிட்டனில் உள்ளூர் தேவாலயம் ஒன்றில் சட்டவாளராக சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

பிரிட்டனில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் பயின்ற இவருக்கு அப் பல்கலைக்கழகம் சிறந்த இலக்கியப்பட்டமளித்து கௌரவித்தது. 1959 ஆம் ஆண்டு அவர் அதே பல்கலைக்கழகச்சங்கத்தில் தலைவராகப் பதவியேற்றார்.

கதிர்காமர் 1955 முதல் 60 வரையும் 1971 முதல் 1974 வரையும் லண்டனிலுள்ள இலங்கைக்கான மேல்முறையீட்டு நீதிமன்றில் பயிற்சி பெற்றார். 1974 இல் ஜெனீவாவிலுள்ள சர்வதேச தொழிலாளர் சங்கத்தில் ஆலோசகராகவும், 1983 முதல் 1988 வரை உலக பொருளாதார நுண்ணறிவு சங்கத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளராகவும் கடமையாற்றினார். 1960 முதல் 1971 வரையும் 1989 முதல் 1994 வரையும் பொருளாதார பொது நிர்வாக, கைத்தொழிற்துறையிலும் சர்வதேச சட்டவாளராயும் பணியாற்றினார். 1991 ஆம் ஆண்டு சனாதிபதியின் சட்ட ஆலோசகராகப் பணியாற்றிய இவர், 1998 ஆம் ஆண்டு சார்க் அமைப்பின் தலைவராகவும் பணிக்கமர்த்தப்பட்டார். 2003 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் செயலாளராகப் போட்டியிட்ட கதிர்காமர் நியூசிலாந்தின் மக்கினன் என்பவரிடம் தோல்வி கண்டார்.

1999 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி புதுக்குடியிருப்பில் சிறிலங்கா விமானப்படைத்தாக்குதலில் 22 பொதுமக்கள் படுகொலை செய்தமை தொடர்பில் கண்டனம் தெரிவித்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரை இவர் கடுமையாக விமர்சனம் செய்தார் 1997 ஆம் ஆண்டு ஜயந்ததனபால ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராக நியமனம் பெறுவதற்கு ஆதரவு தெரிவிக்க மறுத்ததும் ஐ.தே கட்சி ஆட்சியின் போது இவரின் பாதுகாப்புச் செலவினம் தொடர்பாக எழுந்த கேள்விகளும் தென்பகுதியிலும் இவரைச் சர்ச்சைக்குரியவராகியது. இது இவருக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது எனினும் அவர் இனவாதிகள் மத்தியில் செல்வாக்கு மிக்கவராகவே இருந்தார்.

## புதுவித போராட்டம் நடத்துவோம் தனியார் பேருந்து உரிமையாளர் எச்சரிக்கை

சிறிலங்கா அரசு உறுதியளித்தவாறு தண்டப்பண அதிகரிப்பில் திருத்தங்களை மேற்கொள்ளாதுவிடின் இதுவரை நடத்தப்பட்ட போராட்டங்களை விட முற்றிலும் மாறுபட்ட கடும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போக்குவரத்து ஒழுங்கீனங்கள் சம்பந்தமான தண்டப்பண அறவீட்டு சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என தெரிவித்திருக்கும் அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ண, போக்குவரத்து முகாமைத்துவம் ஒன்றை ஏற்படுத்தி இந்தத் தண்டப்பண அறவீட்டைச் செய்தால் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதில்லை என்றும் கூறினார்.

போக்குவரத்து ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக அதிகரிக்கப்பட்ட தண்டப் பணம் குறித்து இரு மாதங்களுக்குள் திருத்தங்களை ஏற்படுத்துவதாக போக்குவரத்துப் பிரதியமைச்சர் எழுத்து மூலம் உறுதிமொழி வழங்கியதால் வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிட்டதாகவும், எனினும் தற்போது பிரதியமைச்சர் அவ்வாறு எதனையும் கூறவில்லை என்று தெரிவித்து வருவதாகவும் கெமுனு விஜேரட்ண தெரிவித்தார்.

போக்குவரத்துப் பிரதியமைச்சர் எங்களுக்கு ஒன்றைக் கூறிவிட்டு மக்களுக்கு வேறொன்றைக் கூறிவருவதால் அவர் அமைச்சுப்பதவிக்குத் தகுதியானவர் அல்ல. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தண்டப்பண முறையை அடிப்படையாக வைத்துக்கொண்டு பொலிசார் முறையற்ற வகையில் தண்டப் பணம் அறவிடுவதால் பேருந்து உரிமையாளர்களும் சாரதிகளும் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளமையே கடந்த செவ்வாய்க் கிழமை மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப்போராட்டத்திற்கான முக்கிய காரணம் அமைச்சருக்கு உறுதியளித்த வகையில் நாங்கள் இரண்டு மாத காலங்களுக்கு எதுவித வேலைநிறுத்தப் போராட்டங்களிலும் ஈடுபடப்போவதில்லை இந்த இருமாத காலப்பகுதியில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சாரதிகளுக்கு இந்த நிலைமை குறித்து விளக்கமளிக்கப்படும் என்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் அதிகாரியைக் காப்பாற்ற முடியாதவர் மாணவரைத் தாக்க உத்தரவிடுகிறார்

*சனாதிபதியைச் சாடுகிறார் விமல் வீரவன்ச*

(கொழும்பு)

யாழ். இணுவிலில் பொலிஸ் அத்தியட்சகரைக் காப்பாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியாத கூட்டுப் படைகளின் தலைவியும் சனாதிபதியுமான சந்திரிகா, கொழும்பு கோட்டையில் பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்த உத்தரவிடுகிறார் என ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிசார் தடியடிப்பிரயோகம் மற்றும் கண்ணீர் குண்டுப்பிரயோகம் நடத்தியமையைக் கண்டித்து பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

60 மில்லியன் ரூபா. செலவில் மேற்கொள்ளப்படவுள்ள கல்விச் சீர்திருத்தங்கள் என்னவென்பது குறித்து சனாதிபதியும் கல்வியமைச்சின் செயலாளரும் மட்டுமே அறிவார்கள். நாட்டின் கல்வித்துறை இன்று மிகவும் ஆபத்தான கட்டத்தில் உள்ளது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மக்கள் பிரதிநிதிகளுடன் ஆலோசிக்காது சனாதிபதியால் இவ்வாறானதொரு நடவடிக்கையை எடுக்க முடியாதென்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

## கதிர்காமரின் கொலைக்கு அமெ.இராஜாங்க அமைச்சர் கண்டனம்

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டதையடுத்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளதாக அமெரிக்க இராஜாங்க செயலர் கொண்டலீசா ரைஸ் தெரிவித்தார். இந்தக் கொலை பயங்கரவாதத்தின் கொடூர செயலெனக் குறிப்பிட்டுள்ள அவர், இந்தக் கொலையை ஐக்கிய அமெரிக்கா வன்மையாகக் கண்டிப்பதாகவும் கூறியுள்ளார். கதிர்காமரை இழந்துள்ளஅவரது குடும்பத்தினர், நண்பர்கள், சகாக்கள் ஆகிய அனைவரிற்கும் ரைஸ் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

## அரசாங்க திணைக்களங்களுக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனமில்லை

அரசாங்க திணைக்களங்களுக்கும் அமைச்சுக்களுக்குமென அண்மையில், உள்வாங்கப்பட்ட பட்டதாரிகள் தமக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என குற்றஞ் சாட்டியுள்ளனர்.

சனவரி முதலாம் திகதி முதல் இந்த பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என முன்னர் சனாதிபதி உறுதி வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக்குற்றச் சாட்டு தொடர்பாக அரசாங்கத்தின் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா கருத்து தெரிவிக்கையில்:

நாங்கள் 41 ஆயிரம் பட்டதாரிகளை அரசாங்கத்தில் உள்வாங்கியுள்ளோம்.

அவர்களுக்காக பல நிரந்தர வெற்றிடங்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

உதாரணமாக எனது அமைச்சில் 585 பட்டதாரிகளில் சுமார் 486 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க திட்டமிட்டுள்ளோம்.

ஆனால் எனது அமைச்சிற்கு என ஒதுக்கப்பட்டவர்களில் பலர் ஏற்கனவே வேறு இடங்களில் தொழில் பெற்றுள்ளனர்.

எனது அமைச்சில் உள்ள பணிகளில் அவர்கள் இணைய விருப்பம் தெரிவிக்கவில்லை.

அவர்கள் வங்கிகள், சுங்கம், சுகாதாரம் ஆகியனவற்றில் இணையவே ஆர்வத்தைக் காட்டுகின்றனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு விருப்பமான பணிகளில் சகலரையும் இணைத்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளோம்.

இதுதான் நாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாக இருக்கின்றது.

எப்படியிருந்த பொழுதிலும் அனைவருக்கும் நிரந்தர வேலைகளை வழங்குவோம் என்பதை மட்டும் நாம் உறுதியாகக் கூறிக் கொள்கிறோம் எனத் தெரிவித்தார்.

(32).

## பல்கலை மாணவர் மீதான தாக்குதல் ஆசிய மனித உ.நி கண்டனம்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்திய போராட்டத்தின் மீது பொலிசார் மேற்கொண்ட தாக்குதல் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என ஆசிய மனித உரிமைகள் நிறுவனம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

மாணவர்களின் உரிமைகள் தொடர்பிலான சாத்வீகப் போராட்டங்களை அடக்க பொலிசாரின் பலத்தைப் பிரயோகித்தமை தவறு எனத் தெரிவித்துள்ள அந்த நிறுவனம் இது குறித்து மிகுந்த அவதானத்தைக் கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை களனி பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம் உள்ளிட்ட தாக்குதல்களை பொலிசார் மேற்கொண்டது தவறானது எனப் பொலிஸ் மா அதிபர் இந்திராடி சில்வா தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் குறித்துதான் அதிக கவனம் எடுத்துள்ளதாக தெரிவித்த அவர் உடனடியாக பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவரின் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (32)

## -சனாதிபதித் தேர்தலை உடன் நடத்த ஐ.தே.கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள நகரசபைகள், பி.சபைகளில் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் ஐக்கியதேசியக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்துப் பிரதேச நகரசபைகள் மற்றும் கிராம சபைகள் யாவும் சனாதிபதித் தேர்தல் உடனடியாக நடத்தப்படவேண்டுமென தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. இது குறித்து கருத்து வெளியிட்ட ஐக்கியதேசியக் கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க, சனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டிய காலத்திலேயே நடத்தப்படவேண்டும். அதனை பிற்போட ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்துள்ளார். (32)


### பதவி வெற்றிடம்

புதுக்குடியிருப்பு அருள்மிகு சிவன் ஆலயத்தில் லிகிதர் பதவிக்கு வெற்றிடம் உள்ளது. ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வே[illegible]ம் நேரில் பேசி முடிவு எடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

ஆலயபரிபாலனசபை,
சிவன் ஆலயம்,
புதுக்குடியிருப்பு.

(சி.12523)

# நானாவதி பரிந்துரைகள் விரைவில் அமுலாகுமென சீக்கியர்களிடம் மத்தியரசு உறுதியளித்துள்ளது

**நானாவதி ஆணைக்குழு பரிந்துரைகள் விரைவில் அமுல்படுத்தப்படும் என்று சீக்கியர்களிடம் மத்தியரசு உறுதிமொழி அளித்துள்ளது.**

கடந்த 1984 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டதன் பின் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து நானாவதி ஆணைக்குழு விசாரணை நடத்தி மத்திய அரசிடம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. அதில் ஜகதீஷ் டைட்லர், சஜ்ஜன் குமார் ஆகிய காங்கிரஸ் தலைவர்களை நானாவதி ஆணைக்குழு குற்றம் சாட்டியது.

இந்நிலையில் நானாவதியின் பரிந்துரைகளை அமுல்படுத்தக் கோரி பா.ஜ உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தை நடத்தவிடாமல் ரகளை செய்து வருகின்றன.

இதற்கிடையில் பாராளுமன்ற வீதியில் கடந்த சில நாட்களாக போராட்டம் நடத்திவரும் சீக்கியர்களை நேற்று முன்தினம் மத்திய அமைச்சர்கள் பிருத்விராஜ் சவுகான் மற்றும் ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் ஆகியோர் நேரில் சந்தித்து பேசினர்.

எனினும் பிரதமர் மன்மோகன்சிங் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை நேரில் சந்தித்து பேச வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர். அதற்கு அனுமதி பெற்றுத்தரப்படும் என்றும் அமைச்சர்கள் உறுதியளித்தனர்.

அமைச்சர்கள் மற்றும் பிரதமர் மன்மோகன்சிங்கின் உறுதிமொழியை ஏற்று சுமார் 84 இற்கும் மேற்பட்ட விதவைகள் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தனர்.

இதற்கிடையில் மத்திய அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் தலைமையில் சீக்கிய பிரதிநிதிகள் நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினர். அப்போது சீக்கிய கலவரத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் அளிக்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்தார்.



சந்தனக்கடத்தல் வீரப்பனின் சமாதியில் அவரது மனைவி, முத்துலட்சுமி வணக்கம் செலுத்திய காட்சி.

# தமிழுக்காக செப்ரெம்பர் 17 இல் சிறைநிரப்பு போராட்டம் நடக்கும்

## ராமதாஸ், திருமாவளவன் அறிவிப்பு

திட்டமிட்டபடி தமிழகம் முழுவதும் செப்ரெம்பர் 17 ஆம் திகதி தமிழுக்காக சிறை நிரப்பும் போராட்டம் நடக்கும் என்று ராமதாஸ், திருமாவளவன் ஆகியோர் தெரிவித்தனர்.

தமிழ் பாதுகாப்பு இயக்க ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு நடைபெற்றது. தமிழ் பாதுகாப்பு இயக்கத் தலைவர்கள் மருத்துவர் ராமதாஸ், தொல். திருமாவளவன் மருத்துவர் சேதுராமன், பழ நெடுமாறன் உட்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டம் முடிந்ததும் ராமதாஸ் தொல்.திருமாவளவன் ஆகியோர் நிருபர்களிடம் கருத்துக் கூறுகையில்;

திருச்சியில் நடந்த மூன்றாவது மொழிப்போர் மாநாட்டின் தீர்மானத்தின்படி செப்ரெம்பர் 17 ஆம் திகதி தமிழகம் முழுவதும் சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப்படுகிறது. அதை உறுதி செய்வதற்காக இந்த ஆலோசனைக் கூட்டம் நடந்தது. சுமார் மூவாயிரம் தமிழறிஞர்கள் உட்பட ஒரு இலட்சம் பேர் சிறை நிரப்பும் போராட்டத்திற்கு விருப்பம் தெரிவித்து கையெழுத்திட்டுக் கொடுத்துள்ளனர். முக்கிய நகரங் களில் செப்ரெம்பர் நான்காம் திகதி வரை பகுதி ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். அதன் பின் செப்ரெம்பர் 17 ஆம் திகதி திட்டமிட்டபடி சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப்படும். அன்னை தமிழுக்காக நாள் கணக்கில், மாதக்கணக்கில் சிறை செல்லத் தயாராக இருக்கிறோம் எனத் தெரிவித்தார்கள்.


# சபாநாயகர் பற்றிய அவதூறுக் கட்டுரையால் மக்களவை 20 நிமிடங்கள் ஒத்திவைப்பு

இந்திய மக்களவையில் சபாநாயகர் பற்றிய அவதூறுக் கட்டுரையால் மக்களவையில் கடும் அமளி ஏற்பட்டதால் 20 நிமிடம் அவை ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி பற்றி பிரபல நாளிதழ் ஒன்று அவதூறுக் கட்டுரை வெளியிட்டிருந்தது. சட்டர்ஜி இன்னும் கம்யூனிஸ் தோழராகவே இருக்கிறார். சோவியத் நாடுதான் (ரஷ்யா தான்) அவரை வழிநடத்தியது என்று அந்த நாளிதழ் குறிப்பிட்டிருந்தது. நேற்று முன்தினம் மக்களவையில் இந்தப் பிரச்சினை வெடித்தது. மக்களவை கேள்வி நேரம் முடிந்ததும் இடதுசாரி கட்சிகள், சமாஜ்வாடி, ராஷ்ட்டிரிய ஜனதாதள உறுப்பினர்கள் எழுந்து மக்களவை சபாநாயகரின் மதிப்பை குறைக்கும் இந்தக் கருத்துத் தொடர்பாக அந்த நாளிதழ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினார். இதற்கு பா.ஜ உறுப்பினர் மல்ஹோத்ரா எதிர்ப்புத் தெரிவித்தார்.

பத்திரிகை சுதந்திரத்துக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும் என்று அவர் குரல் கொடுத்தார். பா.ஜகூட்டணி கட்சியான ஐக்கிய ஜனதாதளம் அப்போது பா.ஜ.வுக்கு ஆதரவு தெரிவிக்காமல் நாளிதழ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியது.

உறுப்பினர்களுக்குள் கடும் கருத்து மோதல் ஏற்பட்டதால் அவை நடவடிக்கை பாதிக்கப்பட்டது. இதனால் 20 நிமிட நேரம் அவை ஒத்திவைக்கப்பட்டது.



மராட்டிய மாநிலத்தில் மழைநீரால் பரவும் நோய்க்கு இதுவரை 89 பேர் பலியாகிவிட்டனர். தலைநகர் மும்பையிலுள்ள ஒரு மருத்துவமனையில் நோயாளிகள் கூட்டம் அதிகமாகக்காணப்படுவதைப் படத்தில் காணலாம்.

# கிருஷ்ணா நதி தண்ணீரில் தமிழகத்திற்கு உரிய பங்குண்டு

## ~ஆந்திர முதல்வர் ராஜசேகரரெட்டி

(சென்னை)

கிருஷ்ணா தண்ணீரில் தமிழகத்துக்கு உரிய பங்கைக் கொடுக்கத் தயாராக இருப்பதாக ஆந்திர முதல்வர் ராஜசேகரரெட்டி கூறினார்.

ஆந்திர மாநில முதல்வர் ஒய்.எஸ். ராஜசேகரரெட்டி சென்னையில் நடைபெறும் விழா ஒன்றில் கலந்துகொள்வதற்காக விமானம் மூலம் நேற்று முன்தினம் காலை சென்னைக்கு வந்தார். சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கியதும் அவரை நிருபர்கள் சூழ்ந்து கொண்டனர். அவர்களுக்கு ராஜ சேகரரெட்டி கருத்தத்தெரிவிக்கையில்;

தமிழ் நாட்டுக்கு கிருஷ்ணா தண்ணீர் திறந்துவிட தயாராக இருக்கிறோம். ஆந்திராவில் பரவலாக பருவமழை நன்றாக பெய்துள்ளதால் மாநிலத்திலுள்ள அணைகளில் தண்ணீர் நிரம்பியுள்ளது. கிருஷ்ணா நதியிலும் போதியளவு தண்ணீர் இருக்கிறது. தமிழகத்துக்குத் தண்ணீர்விட வேண்டுமானால் ஸ்ரீசைலம், சோமஷீலா ஆகிய அணைக்கட்டுகளுக்கு முதலில் தண்ணீர் வரவேண்டும் அதற்குப்பின் அந்த நீர் கண்டலேறு அணைக்கு வரும். தற்போது கிருஷ்ணா தண்ணீர் வரும் கால்வாய்களின் ஒரு சில இடத்தில் அடைப்பு உள்ளது. அதை நீக்குவதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் அனைத்தும் முழுமையாக நிறைவு பெற்றவுடன் தமிழகத்துக்கு கிருஷ்ணா தண்ணீர் வரும்.

தமிழகத்துக்கு எவ்வளவு தண்ணீர் வழங்கப்படவேண்டுமோ அந்த அளவு தண்ணீர் வழங்கப்படும் கிருஷ்ணா தண்ணீரில் உரிய பங்கைத் தமிழகம் நிச்சயம் பெறுமென ராஜசேகரரெட்டி கூறினார்.

# விஜயகாந்தின் அரசியல் மாநாடு

தென் இந்தியநடிகர் விஜயகாந்தின் அரசியல் மாநாடு அடுத்த மாதம் மதுரை சத்திய மங்கலம் பகுதியில் நடைபெற இருப்பதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கான அழைப்பிதழ்கள் வெற்றிலை பாக்குகளுடன் வைத்து மக்களுக்கு வழங்கப்பட்டுவருவதாகக் தொழிலாளர் அணி அமைப்பாளர் தெரிவித்துள்ளார். நடிகர் விஜயகாந்த் அரசியலில் குதிக்கப்போவதாக அறிவித்துள்ளார். இதன் முதற் கட்டமாக மதுரையில் அடுத்த மாதம் 19ஆம் திகதி ஒரு மாநாடு நடத்துகிறார். இந்த மாநாட்டுக்கு தமிழ்நாடு முழுவதும் வீடு வீடாகச் சென்றுஅழைப்புக் கொடுக்கப்படும் என்று விஜயகாந்த் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# செவ்வாயில் மனிதன்வாழ முடியும் இந்திய விஞ்ஞானி பரபரப்புத் தகவல்

மேற்கு வங்க அரசின் அறிவியல் தொழில்நுட்ப அமைப்பு கல்கத்தாவில் ஒரு அறிவியல் சொற்பொழிவு நிகழ்ச்சியை நடத்தியது. விஞ்ஞானி யு.ஆர் ராவ பத்தாயிரம் பார்வையாளர்கள் மத்தியில் சொற்பொழிவாற்றினார். அவர் அங்கு பேசுகையில்; உலக அளவில் பல விண்வெளி விஞ்ஞானிகள் பங்கேற்ற மாநாடு ஒன்றில் அண்மையில் நான் கலந்துகொண்டேன். சிவப்பு கிரகமான செவ்வாயில் மனித குடியேற்றங்களை அமைப்பது குறித்து அந்த மாநாட்டில் ஆராயப் பட்டது. ராட்சத பிரதிப்பலிப்பான்களை (ரிப்ளக்டர்களை) கொண்டு செவ்வாயில் உள்ள பனியை உருக்க விஞ்ஞானிகள் பலர் யோசனை தெரிவித்தார்கள். இதனால் செவ்வாயின் தட்வெப்பநிலை குறிப்பிடத்தக்களவு மாற்றமடையும் காலப்போக்கில் படிப்படியாக மனிதஇனம் செவ்வாயில் குடியேறலாம் என அவர்கள் கருதுகிறார்கள். இதன்மூலம் செவ்வாயில் மனித குடியேற்றம் என்பது வெறும் கற்பனையாக இல்லாமல் வருங் காலத்தில் நடைபெறக்கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

**வாடிக்கையாளர் கவனத்திற்கு!**


**கிளிநொச்சி A9 சாலையில் இயங்கிவருகின்ற மின்னல் இலத்திரனியல் திருத்தகம் புனரமைப்பு வேலைகள் செய்யப்படவுள்ளதால் தங்களால் 01.01.2005 முதல் திருத்துவதற்காக ஒப்படைக்கப்பட்ட உபகரணங்களை 16.08.2005 நாள் முதல் 31.08.2005 நாளுக்குள் மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மீண்டும் புதிய முறையில் புனரமைப்புச் செய்தபின் உங்களுக்கான சேவைகளை மீளப்பெற்றுக்கொள்ள முடியுமென்பதையும் அன்புடன் அறியத்தருகிறோம்.**

-தகவல்-
நிர்வாகமம்

(சி.12525)



சென்னையில் நடந்த அகில இந்திய தெலுங்கு சம்மேளன விழாவில் ஆந்திர முதல் மந்திரி எஸ்.ராஜசேகரரெட்டியுடன் தி.மு.க. துணை பொதுச்செயலாளர் மு.க.ஸ்டாலின் பேசிக்கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படம்.அருகில் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஜி.கே வாசன் இருக்கிறார்.







# ஷேன் வோர்ன் நிதான துடுப்பாட்டம் பல-வோன் நிலையை கடந்தது அவுஸ்.

இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக் கிடையில் ஒல்ட்டிரஸ்போர்ட்டில் நடைபெற்று வரும் ஆஷஸ் கிண்ணத்துக் கான மூன்றாவது டெஸ்ட்போட்டியில் சுழல்பந்துவீச்சாளர் ஷேன்வோர்னின் நின்று நிலைத்த ஆட்டத்தால் அவுஸ்திரேலியா பலவோன் நிலையை கடந்தது..

210 ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட்டுக் கள் என்ற நிலையில் மூன்றாம் நாளை தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலியா ஆட்டநேர நிறைவில் 264 ஓட்டங்களைப் பெற்றிருந் தது. ஷேன்வோர்ன் 78 ஓட்டங்களையும் கிளாஸ்பி ஏழு ஓட்டங் களையும் ஆட்டமிழக் காது பெற்றிருந்தனர்.

மூன்றாம் நாளில் காலநிலை சீரின்மை யால் பலமணிநேரம் போட்டி தாமதித்தே ஆரம்பமானது. பின்னர்மீண்டும் தடைப்பட்டது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக இங்கிலாந்து முதல் இனிங் சில் 444 ஓட்டங்களுக்கு அனைத்து விக் கெட்டுக்களையும் இழந்தது. மைக்கல் வோகன அதிகபட்சமாக 166 ஓட்டங்களை பெற்றார். இன்று போட்டியின் நான்காவது நாளாகும்.

## முதுகு வலியையும் பொருட்படுத்தாது அவுஸ் வீரர் கிளார்க் களத்தில்



முதுகுவலி காரணமாக அவதியுறும் நிலையிலும் அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் மைக்கல் கிளார்க் மூன்றாவது போட்டியில் கலந்து கொண் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழனன்று ஆரம்பமான மூன் றாவது போட்டியில் முதல் நாளன்றே கிளார்க் முதுகு வலி காரணமாக களத் திலிருந்து அகற்றப்பட்டார். எனினும் துடுப் பாட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

அண்மைய நாட்களில் வீரர்கள் காயமடைவது அவுஸ்திரேலிய அணிக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. முத லில் மெக்ராத்தும் அதனையடுத்து பிரட்லீயும் மூன்றாவதாக கிளார்க் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 600 விக்கெட் சாதனை குழந்தைகளுக்கு அர்ப்பணம்


வோர்ன்

'600 விக்கெட்டுக்கள் வீழ்த்தி சாதனை படைத்தது எனது குழந்தை களை சாரும்' என்று ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ்போட்டித் தொடரின்மூன்றா வது டெஸ்ட் கிரிக்கெட்போட்டி மான் செஸ்டர் ஒல்ட்டிரஸ்போர்ட் மைதானத் தில் நடந்து வருகிறது.

இதன் முதல் நாளில் அவுஸ்தி ரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் இங்கிலாந்து முன்னணி துடுப்பாட்டவீரர்ரெஸ் கொதிக்விக்கெட்டை வீழ்த்தினார். இதன் மூலம்வோர்ன் டெஸ்ட் கிரிக்கெட்டில் 600 விக்கெட்டுக்களை கைப்பற்றிய முதல்வீரர் என்ற பெருமையை பெற்றார். அவர் தனது 126 ஆவது டெஸ்டில் இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

600 விக்கெட்டுக்கள் கைப்பற்றியவோர்ன் முதல் நாள் ஆட்டம் முடிந்ததும் கூறியதாவது:-

600 விக்கெட்டுகள் கைப்பற்றியதும் நான் அடைந்த சந்தேசத்தை உச்சரிக்கவார்த்தை இல்லை. உடனடியாக எனது குழந்தைகள் ஞாபகம்தான் எனக்கு வந்தது. ஏனெனில் இந்தப் போட்டி தொடங்கும் முன்பு எனது எட்டுவயது மகளுடன் தொலைபேசியில் பேசினேன். அப்போது நான் சாதனை நிகழ்த் தினால் அது எனது மூன்று குழந்தைகளுக்காகவும் தான் என்று கூறினேன். அதன் படி நடந்தது. எனது வலது கையில் நான் அணிந்து உள்ள 'பட்டி' எனது மனைவி பிரிந்த போது மகள் எனக்கு பரிசாக அளித்தது. அதனை பரிசாக அளித்தபோது வலுவான தந்தை என்று பாராட்டியதை எண்ணிப் பார்த்தேன்.

# ஆபிரிக்க அணியில் கலிஸ்

ஆபிரிக்காவில் நடைபெறவுள்ள ஆசிய ஆபிரிக்க அணிகளுக்கிடையேயான போட்டித் தொடரில் ஆட ஆபிரிக்க அணிக்காக தென்னா பிரிக்க வீரர் ஜக்கலீஸ் அழைக்கப்பட்டிருக்கிறார். இது தொடர்பாக ஆச்சரியப்படுவதற்கில்லை என கலிஸ் தெரிவித்துள்ளார்.

கலிஸ் வரும் ஒக்ரோபரில் நடைபெறவுள்ள அவுஸ்திரேலியாவுக்கெதிரான உலக அணியில் இடம்பெறவுள்ளார். இதற்கிடையில் ஆபிரிக்க அணியிலிருந்து தென்னாபிரிக்க வீரர் அல்பி மோக்கல், சிம்பாப்வேயின் அண்டி பிலிகநட், மக்காயா என்டினி ஆகியோர் விலகியிருக்கின் றனர். முதல்போட்டி வரும் 17 ஆம் திகதியும் இரண்டாவது, மூன்றாவது போட்டிகள் 20 ஆம் திகதி, 21 ஆம் திகதிகளிலும் நடைபெறும்.




# இந்திய அணியில் டெண்டுல்கர் சிம்பாப்வேக்கு எதிராக பங்கேற்பார்



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் சிம்பாப்வேக்குச் செல்லும் இந்திய அணியில் இடம்பெறுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சைக்குட்பட்டிருந்த டெண்டுல்கர் கடந்த ஒரு மாதமாக போட்டிகளில் கலந்துகொள்ளாததுடன் இலங்கையில் நடைபெற்ற முத்தரப்புப் போட்டியிலும் அவர் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில் சச்சின் உடல்தகுதியை பெற்றுள்ளதாகவும், எனவே, சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் பங்கேற்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக மீண்டும் கங்குலி நியமிக்கப்பட்டுள்ளார்.

மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்திய அணி கடந்த ஓராண்டு காலமாக சரிவர ஆடவில்லை. இனிவரும் போட்டிகளில் சிறப்பாக ஆடி வெற்றிபெற ஆட்டத்திறனில் மாற்றம் செய்யப்படும்.

பயிற்சியாளர் சப்பலுடன் இணைந்து செயற்படுவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். அவரும் ராவிட்டும் அணியின் வெற்றிக்கு நல்ல ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். எனக்கும் ராவிட்டுக்கும் இடையே எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை. யாருடைய தலைமையில் விளையாடகிறோம் என்பது முக்கியமில்லை. அணியின் வெற்றிக்காகத்தான் விளையாட வேண்டும்.

இலங்கை தொடர் முடிந்துபோன விவகாரம்,சிம்பாப்வே தொடரில் சிறப்பாக செயற்படுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. சிம்பாப்வே தொடருக்கான அணியில் மாற்றம் செய்யப்படுமா?எனக் கேட்டதற்கு அது பற்றி இப்போது கூற முடியாது. இது குறித்து சப்பல், ராவிட் ஆகியோரிடம் ஆலோசனை நடத்துவேன் என்றார்.

# திட்டமிட்டபடி இங்கிலாந்து சுற்றுப் பயணம் நடைபெறும்



சிம்பாப்வே சுற்றுப் பயணம் இரத்துச் செய்யப்பட்டு அதற்காக மேற்கிந்திய தீவுகள் அணி மேலதிகமாக ஒரு டெஸ்ட் போட்டியில் பங்கேற்குமென கூறப்பட்டபோதும் திட்டமிட்டபடி நியூசிலாந்துப் பயணம் நடைபெறும் என சிம்பாப்வே கிரிக்கெட்சபைத் தலைவர் பாப்வே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இருநாட்டு கிரிக்கெட் சபைகளும் இணங்கியபடி நியூ சிலாந்து சுற்றுப் பயணம் நடைபெறும் என்றும், அனைத்துப் போட்டிகளும் கலந்துரையாடியே நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பத்தாவது உலக தடகள போட்டி காட்லினுக்கு இரண்டாவது தங்கம்




பின்லாந்தில் நடைபெற்றுவரும் 10ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் அமெரிக்க அதிவேக வீரரும், ஒலிம்பிக் சம்பியனுமான ஜஸ்டின்காட்லின் கடந்த வாரம் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றார். இந்த நிலையில் அவர் மேலும் ஒரு தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

நேற்று முன்தினம் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் இறுதிப் போட்டிநடந்தது. இதில் காட்லின் 20.04 வினாடியில் முதலா வதாக வந்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். மேலும் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கமும் அமெரிக்க நாட்ட வருக்கே கிடைத்தது. வோலஸ் பியர்மோன் இரண்டாவது இடமும் (20.20 வினாடி),நடப்புச் சம்பியன் ஜான்கேபல் (20.31 வினாடி),மூன்றாவது இடமும் பெற்றனர்.


இதேவேளை கம்பூன்றி தாண்டுதலில் நெதர்லாந்து வீரர்ரென்ஸ் பிளோம் தங்கப்பதக்கம் வென்றார். அவர் 05.80 மீற்றர் உயரம் தாண்டி முதலிடத்தைப் பிடித்தார். அமெரிக்காவின் பிராட்வோல்கர் (05.75 மீற்றர்), ரஷ்யாவின் பாவல் ஜெராசி மோவ் (05.65 மீற்றர்), ஆகியோர் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றனர்.

100 மீற்றர் பெண்கள் தடை ஓட்டத்தில் அமெரிக்க வீராங்கனை மிசில்லா பெர்ரி தங்கம் வென்றார். இலக்கை அவர் 12.66 வினாடியில் எட்டினார். இதில் வெள்ளிமற்றும் வெண்கலப்பதக்கம் ஜமேக்கா வீராங்கனைகள் டிலோரின் என்னிஸ், பிரிகிட் போஸ்டர் ஆகி யோருக்கு கிடைத்தது.

# காலிறுதிக்கு முன்னேறினார் ஷரபோவா




அமெரிக்காவின்,ட ரசன் பகுதியில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் ஜே.பி.மோர்கன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. காலி றுதிக்கு முந்தைய சுற்றுப்போட்டிகள் நேற்று முன்தினம்நடந்தன. ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா, தனது சகநாட்டு வீராங்கனை அன்னா சாக் வேடாட்சை 4-6,6-4,7-5, என்ற செட்டுகளில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். வலது மார்புப் பகுதியில் சமீபத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்தப் போட்டியில் மரியா கடும் வலியுடன் விளை யாடினார். போட்டி முடிந்ததும் எம்.ஆர்.ஐ., ஸ்கேன் பரிசோதனையும் அவருக்கு நடத்தப்பட்டது. காலிறுதியில் மரியா,ஸ்லோவாகியா வீராங கனை டேனிலா ஹண்டுசோவாவைச் சந்திக்கிறார். டேனிலா 6-4,6-4 என்ற சுலப செட்டுக்களில் உக்ரைன் வீராங்கனை கத்ரினா பண்டா ரென்கோவை வென்றார்



இன்டியானா போலிசில் நடந்த '2005 விசாசம்பியன்ஷிப் ஜிம்னாஸ்டிக்' போட்டியில், நஸ்டியாத்லியூகின் சாகசம் நிகழ் திப் பார்வையாளர்களை அசத் தினார். இந்தப்பிரிவில் இவர் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

## சிந்தனைக்கு



விடுதலையை வேண்டி நிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப்பாட்டை, எந்தவொரு சக்தியாலும் அழித்து விட முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 14.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

## பேரினவாதம் பலியிட்டது!

லக்ஷ்மன் கதிர்காமரைச் சிங்களப் பேரினவாதம் பலியிட்டுவிட்டது. ஆனால், லக்ஷ்மன் கதிர்காமரும் தான் பலிபீடத்தில் ஏறுகின்றோம் எனத்தெரியாமல் ஏறவுமில்லை. கதிர்காமர் கடந்த ஒரு தசாப்த காலத்தில் சிங்களப் பேரினவாதத்திற்கு ஆற்றிய சேவையின் பிரதியுபகாரமாகவே இது அவருக்குக்கிடைக்கப்பெற்றது.

லக்ஷ்மன் கதிர்காமர் தமிழ் மக்களின் பிரதிநிதியும் அல்ல. தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்தவரும் அல்ல. தமிழரின் பெயரில் பௌத்த – சிங்கள பேரினவாத அரசின் தேவைகளை நிறைவு செய்யும் ஒருவராகவே அவர் பணி இருந்துள்ளது. அதாவது சிங்கள அரசிற்கான சேவையை அவர் முழுமனதுடன் செய்துள்ளார்.

அதுமட்டுமன்றி லக்ஷ்மன் கதிர்காமர் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திற்கு ஏற்புடையதான நீதியான தீர்வொன்றைக் காணவிளையவில்லை. அவர் சமாதானத் தீர்வில்கூட அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதை வெளிப்படுத்த நோர்வேயின் சமாதான முயற்சிகளில் அவர் ஒதுங்கியிருந்ததையும், பல தடவை நோர்வேயுடன் முரண்பட்டதையும்கூட சுட்டிக்காட்ட முடியும். இலங்கையின் ஒருமைப்பாடு, ஐக்கியம், பயங்கரவாதம் என்ற பேச்சுக்கள் ஊடாக தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை ஒழித்துவிடும் நடவடிக்கையிலேயே முனைப்புக் காட்டினார். தமிழர் இனப்படுகொலைகளைக்கூட அவர் நியாயப்படுத்தினார். பௌத்த–சிங்கள அடிப்படைவாத சக்திகள் கூட கதிர்காமரை ஏற்றுக் கொண்டுள்ளன எனின், அவர் காட்டிய விசுவாசம் எந்தளவில் இருத்தல் வேண்டும்?

சனாதிபதி சந்திரிகா யுத்தத்தை முன்னெடுத்தபோது கதிர்காமர் அதற்குத் தோள் கொடுத்தார். தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திற்குப் பயங்கரவாதம் என்ற வடிவத்தைக் கொடுக்க பெரிதும் முயற்சித்தார். இவரின் இராஜதந்திர முயற்சிகளினால் சிறிலங்கா அரசு குறிப்பிடத்தக்க நன்மைகளை அடைந்தது என்பது வெளிப்படையானது.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் தமிழ் மகன் எவரும் வகிக்காத உயர்ந்த பதவியை லக்ஷ்மன் கதிர்காமர் வகித்ததோடு, அப்பதவியில் நீண்டகாலம் நிலைத்திருக்கவும் செய்தார். அதாவது சிங்களப் பேரினவாதத்தை முழுஅளவில் திருப்திப்படுத்துபவராக இருந்தார் என்பதையே அவரது நீண்டகாலப் பதவி நீடிப்பு வெளிப்படுத்துவதாய் இருந்தது.

சிறிலங்காவில் லக்ஷ்மன் கதிர்காமர் வகித்த உயர்ந்த பதவி போன்று வேறு எந்தத் தமிழரும் வகிக்கவில்லை. சிங்கள அரசாங்கங்களைப் பாதுகாத்தவர்கள்கூட – அதாவது அரசாங்கங்களைக் கவிழவிடாமல் அவை பெரும்பான்மை பலம் பெறுவதற்குக் காரணமாக இருந்தவர்களுக்குக் கூட– இத்தகைய முக்கியத்துவமான அமைச்சுக்கள் வழங்கப்படவில்லை.

இதேவேளை கதிர்காமருக்கும் தாம் வகிக்கப்போகும் பாத்திரத்தின் தார்ப்பரியம் புரியாமல் இல்லை. தனது ஆற்றல், திறமை என்பனவற்றைச் சிங்களப் பேரினவாதம் சலுகைகளை வழங்கி பெறமுற்படுகின்றதென்பது அவருக்கும் நன்கே தெரியும்.


ஆயினும் கதிர்காமர் தனது ஆசைகளை வளர்த்துக் கொண்டவராகச் சிங்களப் பேரினவாதத்திற்குச் சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வந்தார். தமிழர் என்ற அடையாளம் வெளிப்படுத்தப்பட்டாலும் அவர் என்றுமே தமிழ் மக்கள் பக்கம் திரும்பிப் பார்த்ததுகூட கிடையாது.

அதுமட்டுமன்றி அண்மைக்காலத்தில் அவர் சற்று அதிக ஆசை கொண்டவராகவே இருந்துள்ளார். குறிப்பாக ஜே.வி.பி யுடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொள்வதன் மூலம் பிரதமர் பதவி குறித்து அவர்கனவு கண்டதுமுண்டு. இது ஒருவகையில் அவர் சிங்களப் பேரினவாதத்தைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டதன் வெளிப்பாடாகவே கொள்ளவேண்டியதாக இருந்தது.

கதிர்காமரின் அறிவு, ஆற்றல், திறமை என்பதைப் பயன்படுத்திக் கொண்டமையைப்போல், கதிர்காமரின் அறியாமையும் அது பயன்படுத்திக் கொள்ளத்தவறவில்லை. அதாவது, கதிர்காமரைப் பலியிடுவதன் மூலமும் தமக்கு ஆதாயம் உண்டு என்பதைப் பௌத்த சிங்களப் பேரினவாதம் உணர்ந்தே இருந்தது. இதற்காகவே கதிர்காமரை ஒரு பகடைக்காய் போல் ஆக்கியிருந்தது. அத்தோடு, கதிர்காமருக்கு ஆபத்து ஏதும் விளையுமானால், அது விடுதலைப் புலிகளினால் விளையும் என்பது போன்ற தோற்றப்பாட்டையும் உருவாக்கியிருந்தது.

இந்நிலையில் கதிர்காமர் சிங்கள ஆட்சியாளர்களால் பலியிடப்பட்டுள்ளார் என்பதே நிஜமானதாகும். ஆகையினால் இக்கொலையைப் புரிந்தவர்கள் யார் எனத் தேடுவது அர்த்தமற்ற தொன்றாகும். வழமைபோலவே விடுதலைப்புலிகள் மீது படைத்தரப்பு குற்றம் சாட்டுகிறது. இது ஏற்கத் தக்கதல்ல. ஆனால், இக்கொலையைச் செய்தவர்கள் யாராக இருப்பினும் கதிர்காமர் மறைவு குறித்து தமிழ் மக்கள் கவலை கொள்வதற்கு எதுவுமே இருக்கவில்லை. சிங்களத் தரப்பு லக்ஷ்மன் கதிர்காமரைப் பலியிட்டுவிட்டது எனக் கொள்வதுடன் மட்டும் சரி.

செய்தி:– பொதுக் கட்டமைப்பைக் கலைத்தால் ஆளும் கூட்டணியுடன் ஜே.வி.பி தேர்தல் உடன்பாடு...




~இணுவில் சம்பவ விவகாரம்~

## புலிகளைத் தொடர்புபடுத்துவது குறித்து யாழ்.மாவட்ட அரசியல்துறை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் இளைஞர் ஒருவர் படையினரால் கொலை செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்ட மக்கள் கொந்தளிப்பு சம்பவங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உறுப்பினர்களை சம்பந்தப்படுத்துவதை விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறை கண்டித்துள்ளது. நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் மாவட்ட பிரதிநிதிகளான ரொனி மற்றும் மக்ஹூம் ஆகியோரை சந்தித்த யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி இந்தக் கருத்தை வெளியிட்டார்

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளை அவமானப்படுத்துவதும், அரசியல் பணிகளுக்குத் தடை ஏற்படுத்துவதும் என்ற பொலிசாரினதும், படையினரதும் உள்நோக்கங்களே இந்த குற்றச்சாட்டுகளுக்கு பின்னால் இருப்பதாக இளம்பரிதி சுட்டிக்காட்டினார். மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் அரசியல் பணிகளில் ஈடுபட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் மீது ஒட்டுக்குழுக்களின் பெயரில் இலங்கையின் படைத்தரப்பே தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் இதேபோன்ற ஒரு சூழ்நிலையை யாழ்ப்பாணத்திலும் ஏற்படுத்தி அங்கு இயல்பற்ற நிலையை உருவாக்குவதே படைத்தரப்பின் நோக்கமாக உள்ளது. இதனைத் தவிர்ப்பதற்கு அரசியல் பணிப்போராளிகளை மீண்டும் தமது கட்டுப்பாட்டு பகுதிக்கு திரும்ப பெற்றுக்கொள்ளும் தீர்மானத்தை எடுக்கவேண்டியேற்படும் என எச்சரித்த இளம்பரிதி அது போர் நிறுத்தத்தை முழுமையாக செயலிழக்கச்செய்து விடுமெனத் தெரிவித்தார். எனவே போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் இதனைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். (32)

## மேல் கொத்மலை திட்டத்தை எதிர்த்து உண்ணா விரதம்; இருவர் நிலை கவலைக்கிடம்

(கொழும்பு)

மேல் கொத்மலை திட்டத்தை எதிர்த்து சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் மூன்றாவது நாளாகவும் தொடர்கிறது. இந்த நிலையில் உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ள ஆறு இளைஞர்களில் இருவரின் உடல் நிலை மிகவும் மோசமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது .ஆறு இளைஞர்களும் நீராகாரம் கூட அருந்தாமல் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மேல் கொத்மலை திட்டத்தை எதிர்க்கும் அமைப்புக்கள் இன்று நடத்த தீர்மானித்திருந்த எதிர்ப்புக் கூட்டம் நிர்ணயித்தப்படி நடைபெறும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பொ. சந்திரசேகரன் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துரைத்த அவர் நாட்டில் அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இன்று எதிர்ப்புக்கூட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவித்தார். இதேவேளை எரிபொருள்துறை அமைச்சர் மேல் கொத்மலை திட்டத்தை கைவிடுவது தொடர்பில் உரிய உறுதி மொழியை அளிக்கும் வரையில் உண்ணாவிரத போராட்டம் தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டார். (32)

## கதிர்காமரின் கொலைக்கு சந்திரிகாவும் ரணிலுமே பொறுப்பு

ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்கு சனாதிபதி சந்திரிகாவும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுமே பொறுப்பேற்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் இவ்வாறு தெரிவித்தார். (32)

## வவுனியாவில் 16 பேர் கைதாகி விடுதலை

(வவுனியா)

மட்டக்களப்பு பகுதியில் இருந்து வவுனியாவுக்கு சென்ற 16 பேர் வவுனியா பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் அதிகாலை 1.15 மணியளவில் சந்தேகத்திற்கு இடமான முறையில் வவுனியா பேருந்து தரிப்பு நிலையத்தில் நடமாடிய சமயமே பொலிசாரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் மூன்று பேரை தவிர ஏனைய அனைவரும் ஒரே வயதினர் என்று தெரிவிக்கும் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம்.சி அபயசிங்க பண்டா இவர்கள் யார் என்று தெரியவில்லை என்றும் இவர்கள் தொடர்பாக மட்டக்களப்பு பகுதி பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டு பின்னர் வவுனியா நீதிமன்றத்தில் வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ் செழியன் முன்நிலையில் நிறுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (32)

## சுதந்திர சதுக்கத்தில் நாளை கதிர்காமரின் இறுதிக்கிரியை

(கொழும்பு)

சுட்டுக் கொல்லப்பட்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிக் கிரியைகள் நாளை அரச மரியாதையுடன் சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறுமென சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. அன்றைய தினம் தேசிய துக்கதினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. லக்ஷ்மன் கதிர்காமரின் மரணச் சடங்குகள் தொடர்பாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு இந்தத் தீமானத்தை எடுத்துள்ளது. இந்த நிலையில் நேற்று பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் திங்கட் கிழமை பிற்பகல் இரண்டு மணிவரை 117, விஜயராம மாவத்தை கொழும்பு ஏழில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் உடல் அஞ்சலிக்காக வைக்கப்படும் என வும் சனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. 32)

-கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட-

# ரேலங்கி செல்வராஜாவினதும் கணவரதும் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும்

(கொழும்பு)

கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட வானொலி அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா மற்றும் அவரின் கணவர் செல்வராஜாவின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா மற்றும் அவரின் கணவர் செல்வராஜா ஆகியோர் நேற்று முன் தினம் சிறிலங்கா தலைநகர் கொழும்பில் பம்பலப்பிட்டிப் பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றில் நின்றிருந்தவேளை இனந்தெரியாத நபர் ஒருவர் பகல் 1.30 மணியளவில் இவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தியுள்ளார். இதன்போது இவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடாத்திய நபர் தொடர்பான விபரங்கள் அல்லது கொலைக்கான காரணங்கள் தொடர்பான விபரங்கள் எதுவும் இது வரைக் தெரியவரவில்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ரூபவாஹினி ஆகியவற்றின் அறிவிப்பாளராக ரேலங்கி செல்வராஜா கடமையாற்றி வந்தவர் என்பதும், இவரின் கணவர் புளொட் குழு முன்னாள் உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கதிர்காமரின் கொலை குறித்து சனாதிபதி மிகுந்த கவலைதெரிவிப்பு

(கொழும்பு)

வெளியுறவுஅமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டமை குறித்து தான் மிகுந்த கவலை அடைவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். இந்தப் பயங்கரவாத செயலைத் தான் கண்டிப்பதாகவும் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொலையாளிகளை விரைவில் சட்டத்தின் முன் கொண்டுவரநடவடிக்கை எடுக்கப்படும். தனது உயிருக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல்கள் இருந்த போதும் பயங்கரவாதத்திற்கு எதிராக இவர் போராட்டம் நடத்தியுள்ளார் என சனாதிபதி புகழாரம் சூட்டியுள்ளார். (32)

# "சர்வதேச உறவுகள்" சஞ்சிகை வெளியீட்டில் கதிர்காமர் இறுதியாகக் கலந்துகொண்டார்

கொலை செய்யப்பட்ட வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் இறுதியாகக் கலந்துகொண்டார். பண்டாரநாயக்க சர்வதேச கல்வி நிலையம் வெளியிட்ட "சர்வதேச உறவுகள்" என்ற சஞ்சிகையின் வெளியீட்டு விழாவிலேயே கலந்து கொண்டார். அங்கு அவர் உரையாற்றுகையில் சர்வதேச சஞ்சிகை தொடர்பாக நான் உங்களிற்கு எனது தனிப்பட்ட அனுபவத்தைக் கூறுவதென்றால் இவ்வாறான ஒரு சஞ்சிகையை வெளியிடுவது கனவாகவிருந்தது. இது இந்தக் கல்வி நிலையத்தின் முகாமைத்துவத்திற்கு மட்டுமல்லாது எனது கனவும் கூட. சஞ்சிகை ஒன்றை வெளியிடவில்லையென்றால் இவ்வாறான சர்வதேச கல்வி நிலையத்திற்கு முக்கியத்துவம் குறையுமென நான் நினைத்தேன். இது தொடர்பான சவாலை நாம் பொறுப்பேற்க வேண்டுமெனக் கூறினேன். அதனைத் தீர்மானித்தவுடன் அதனைச் செய்ய வேண்டும். சஞ்சிகை ஒன்றை எழுதும் போது கட்டுரை எழுதுவோரைச் சேர்த்துக்கொண்டு அதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இது போன்ற சஞ்சிகை ஒன்று எமது நாட்டிலில்லை. இவ்வாறான நிலையில் இது முதற் சஞ்சிகை. இன்னும் 15 வருடங்களில் நாம் உயிரோடு இருப்பது சாத்தியமில்லை. இங்குள்ள பேரவை உறுப்பினருக்கும் அவ்வாறே ஏற்படும். முதலாவது பிரச்சினை எழுந்துள்ளது. இரண்டாவது பிரச்சினை உருவாகி வருகின்றது. மூன்றாவது பிரச்சினை காணவேண்டியுள்ளது எனவும் கூறினார்.

# பொலிஸ் நிலையம் மீது நேற்றிரவு தாக்குதல்

அம்பாறை திருக்கோவில் சிறிலங்கா பொலிஸ் நிலையம் நோக்கி நேற்றிரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதுடன். இரு கைக்குண்டுகளும் வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இரவு 8.45 மணியளவில் இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் எவரும் காயமடையவில்லை எனப் பொலிசார் தெரிவித்தனர்.

## முல்லை...

க.சரவண பவன் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் உமைநேசன் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து சிறப்புரையை தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா ஆற்றினார். இந் நிகழ்வில் மாவட்ட, கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள். கல்விச் சமூகத்தினர் கலந்து கொண்டனர்.

இதேவேளை மன்னாரில் எதிர் வரும் 27 ஆம் திகதி தமிழ் தேசிய எழுச்சி மாநாடு நடத்தப்பட வுள்ளது. அன்றைய தினம் முற்பகல் ஒன்பது மணிமுதல் பிற்பகல் மூன்று மணி வரை இந்த மாநாடு நடத்தப்பட வுள்ளது. (08,18)

## அவசரகால...

திட்டமிட்டமை தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதற்குச் சான்றாக அவர்கள் உட்கொண்ட உணவுகள், இனிப்புப் பண்டங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. இதனைக்கொண்டு அவர்கள் சிலநாட்கள் தங்கியிருந்தே இந்த தாக்குதலுக்குத் திட்டமிட்டிருக்கலாம் என்பது புலனாவதாகப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

அத்துடன் தாக்குதலின் பின்னர் அவர்கள் கைவிட்டுச்சென்றதாகக் கூறப்படும் கைக்குண்டுகள் தூரத்திலிருந்து குறி வைத்து சுடக்கூடிய சினைப்பருக்கு பயன்படுத்தக்கூடிய 7.62 ரக குண்டுகள் என்பன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எனினும் சினைப்பர் ஆயுதம் இன்னும் மீட்கப்படவில்லை எனத் தெரிவித்தார். (32)

## கதிர்காமரின்...

பணிபுரியும் தளையசிங்கத்தின் வீடு கதிர்காமர் வீட்டிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவிலே அமைந்துள்ளது. அவரது வீட்டின் மாடியிலிருந்து தான் கதிர்காமர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதற்கான தடயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் சிறிலங்காப் பொலிசார் கூறுகின்றனர்.

தங்களது வீட்டின் மாடிப்பகுதி பெரும்பகுதி நேரம் பூட்டியே வைத்திருப்பதால் இந்தத் தாக்குதல் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாதென்று வீட்டின் உரிமையாளர்கள் இருவரும் விளக்கம் அளித்துள்ளனர்.

எந்தநேரமும் பலத்துபாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்ட பிரதேசத்தில் இந்த வீடு அமைந்துள்ளது என்பதும் குறிப்பாக சுவீடன் தூதரகத்திற்குமிக அருகே இந்தவீடு அமைந்துள்ளது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

மேற்படி இல்லத்தின் மாடியில் அமைந்துள்ள குளியலறை ஜன்னல்கள் உடைக்கப்பட்டு அதன் வழியே கதிர்காமர் மீதுகுறிபார்த்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவரைக் குறிபார்த்துச்சுடுவதற்காக ஏழு அடி உயரமான ஏணியொன்று குளியலறையினுள் பயன்படுத்தப் பட்டுள்ளதாகவும் பொலீஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

## ஓமந்தை...

ஆகியோர் இராணுவ உயரதிகாரிகளுடனும், பொலிஸ் உயர் அதிகாரிகளுடனும் நடாத்திய பேச்சுவார்த்தையை அடுத்து நண்பகல் 12.20 மணியளவில் படையினர் ஏ-9 வீதி ஊடான போக்குவரத்திற்காக அனுமதி வழங்கினர்.

இதேவேளை முகமாலையூடான போக்குவரத்துக்களும் காலை 10.00 மணிவரை தடுக்கப்பட்டு பின்னரே பயணிகள் செல்ல படையினரால் அனுமதிக்கப்பட்டனர்.

முன்னதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா மாவட்ட பிரதித் தலைவர் பவுலோ, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட தலைவர் ஜோனி ஆகியோர் ஓமந்தையில் படையினரால் மக்கள் இடைமறிக்கப்பட்ட சம்பவம் குறித்து வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானத்தைத் தனித் தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைச் செயலகத்திற்கு வருகை தந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா மாவட்ட பிரதித் தலைவர் பவுலோ வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச் சந்திப்பின் போது ஏ-9 வீதி ஊடான போக்குவரத்தைப் படையினர் தடுத்தமை தொடர்பாக விசேடமாக கலந்துரையாடப்பட்டது. இச் சந்திப்பின் போது ஏ-9 வீதி ஊடான போக்குவரத்தைப் படையினர் தடுத்தமையால் மக்கள் எதிர் நோக்கிய பிரச்சினையை விரிவாக எடுத்து விளக்கிய ஞானம் ஏ-9 வீதி போக்குவரத்தை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா மாவட்டப் பிரதித் தலைவர் பவுலோவைக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை காலை 11.00 மணியளவில் விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைச் செயலகத்திற்கு வருகை தந்த இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்டத் தலைவர் ஜோனி வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானத்தை சந்தித்துக் கலந்துரையாடினார். இச் சந்திப்பின் போது தென் இலங்கை சம்பவத்தை அடுத்து வட பகுதிக்குச் செல்ல வேண்டிய பொது மக்களைப் படையினர் தடுத்துள்ளமையால் பாரிய பிரச்சினைகளை மக்கள் எதிர் கொண்டமையைச் சுட்டிக்காட்டிய ஞானம் படையினரின் இந் நடவடிக்கை பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. வன்னிப் பகுதிக்குச் செல்ல வேண்டிய பொது மக்களையும், வாகனங்களையும், படையினர் தடுத்து வைத்துள்ளமையால் மக்கள் ஆத்திரமடைவதால் விபரீதமான விளைவுகள் ஏற்படலாம். இவ் விபரீதமான விளைவு தடுக்கப்பட வேண்டுமாயின் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மக்கள் போக்குவரத்திற்கான ஏற்பாடுகளை உடன் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதுடன் வடபகுதிக்கும் தென் பகுதிக்குமான ஒரு இணைப்பு பிரதேசமாக வவுனியா விளங்குவதால் இங்கு இயல்பு நிலை பாதிக்கப் படாமல் இருக்க வேண்டும் அதற்கு படை அதிகாரிகளுடன் நீங்கள் கலந்துரையாடி உரிய நடவடிககை எடுக்க வேண்டுமென ஞானம் மேலும் கேட்டுக் கொண்டார். (11,21)

## கதிர்காமரின்கொலை.

வார்த்தை மேசைக்கு திரும்ப வேண்டுமென்று நாம் விலியுறுத்தி வந்தோம். மீண்டும் முழு அளவில் யுத்தம் வரும் என்ற அபாயம் இல்லையென்றாலும் இது போன்ற கொலைகள் போர் நிறுத்ததை பெரும் அழுத்தத்திற்கு உள்ளக்குகிறது என அவர் தெரிவித்தார்.

## புலிகள்...

அலுவலகம் சார்பில் பேசவல்ல ஒருவர் சற்றுமுன் எங்களிடம் கூறினார் என்று கேட்கப்பட்டபோது, அவர் பதிலளிக்கையில், இக் கருத்துத்தான் எங்களுக்கு மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் கதிர்காமருக்கு மிகப்பலமான பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் அவருக்கு பாதுகாப்பு அளித்துக் கொண்டிருந்தாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றது.இவ்வளவு உயர்ந்த பாதுகாப்பும் பெருமளவு படைவீரர்களும் பாதுகாப்பு கொடுக்கின்ற பகுதிக்குள் இவ்வளவு துல்லியமாக இப்படி ஒரு திட்டமிட்டு தாக்குதலை நடத்துவது வெளியில் இருந்து செய்வதற்கான சத்தியப்பாடு மிகக்குறைவு. இப்பொழுது வருகின்ற செய்திகளை நாங்கள் பார்க்கின்ற போது படைத்தரப்பின் மீதும் இவர்களுக்கு பாதுகாப்பு அளித்தவர்கள் மீதும்-ஏற்கனவே இவர்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகள் எங்களுக்கு மிக அதிகமான சந்தேகத்தை கிளப்புகின்றது எனத்தெரிவித்தார்.

நான் விடுதலைப்புலிகளின் பட்டியலில் இருப்பதனால் அவர்கள் தாக்குதல் நடத்தக் கூடிய முதல் நபராகவும் நான் இருக்கின்றேன். ஏனென்றால் பலநாடுகளிற்குச் சென்று விடுதலைப்புலிகளுக்கு தடைவிதிக்க வேண்டுமென்று பிரச்சாரத்தை மேற்கொண்டேன். அவர்கள் என்மீது கோபம் கொண்டிருந்தார்கள் என்றும் தான் தாக்குதல் பட்டியலில் முதலாவதாக இருக்கின்றேன் என்றும் கதிர்காமர் கூறியிருந்தாரே என்று கேட்டபோது அரசியல் துறைப்பொறுப்பா[illegible] பதிலளிக்கையில்;

கதிர்காமர் [illegible]ட்டுமல்ல பலர்தமிழ் மக்களுடைய உரிமைப்போராட்டத்தை கொச்சைப்படுத்துவதிலும், தமிழ் மக்கள் மீதான வன்முறையை நியாயப்படுத்துவதிலும் ஈடுபட்டிக்கின்றார்கள். அந்தச் செயலில் ஈடுபட்டவர்களில் கதிர்காமரும் ஒருவர். கடந்த காலங்களில் அவருக்கு உலகளவில் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பாகவும் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் தொடர்பாகவும் தவறான கருத்தை கொண்டுசெல்வதற்கு வாய்ப்பிருந்தது. இன்றைய காலகட்டத் தைப் பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் நேரடியாகவே சர்வதேச சமூகத்துடன் தொடர்புகளை-உறவுகளை வளர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். நேரடியாக உரையாடுகின்ற சூழல் உருவாகியிருக்கின்றது. இந்தக் கட்டத்தில் கதிர்காமருடைய முன்னைய செயற்பாடுகள் எல்லாம் பலவீனமடைந்த நிலைதான் இப்பொழுது இருக்கின்றது. ஆகவே விடுதலைப்புலிகள் மீதோ, தமிழ்மக்கள் மீதோ, தவறான அபிப்பிராயங்களை உலக அளவில் ஏற்படுத்தியதற்காக இந்த நிகழ்வு நடந்தது போல அல்ல.அங்கே தெற்கில் அரசியல் குழப்பங்களும், முரண்பாடுகளும், கொலைகளும் தீவிரம் அடைந்திருக்கின்றது எனத் தெரிவித்தார்.

அப்படி என்றால் கதிர்காமரின் கொலையை நீங்கள் கண்டிக்கின்றீர்களா எனக்கேட்டபோது அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிக்கையில்:

கதிர்காமரின் கொலையைப் பொறுத்தவரையில் இந்தச் சமாதானச் சூழலில் விடுதலைப் புலிகள் மீதான குற்றம் சுமத்துகின்ற இந்நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாங்கள் தற்பொழுது உண்மை நிலைகளை ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். என்ன காரணத்திற்காக நடந்திருக்கின்றதென்பதனை நாம் முழுமையாக அறிந்த பின்னர்தான் எங்களுடைய நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்துவோம். தற்பொழுது விடுதலைப் புலிகள் மீது எழுந்தமான குற்றஞ் சுமத்துகின்ற இந்நடவடிக்கையை நாங்கள் மிகமிக வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தற்போது ஏற்கனவே பிரச்சினைகளுக்கு உள்ளாக்கியிருக்கும் சமாதான வழிமுறைக்கு ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துமென நினைக்கிறீர்களா எனக் கேட்டபோது;

இது எங்களைப் பொறுத்தவரையில் அரசு மட்டத்தில் சிறிலங்காவினுடைய பாதுகாப்பும் உள்விவகாரங்களில் இருக்கின்ற பலவீனங்களும் முரண்பாடுகளினதும் வெளிப்பாடாகவே நாம் பார்க்கின்றோம்.

இரண்டு தரப்புக்குமிடையே உள்ள முரண்பாட்டை இச்சம்பவம் அதிகரிக்குமென நம்பவில்லை. ஏற்கனவே இது பற்றி நாங்கள் தெளிவாக்கியிருக்கின்றோம். படைத்தரப்பினரும் ஆயுதக் குழுக்களும் இணைந்து இப்பொழுது பல குழப்பமான சம்பவங்கள், கொலைகள் நடைபெற்று இருக்கின்ற, தீவிரப்பட்டிருக்கின்ற இந்நிலையை நாங்கள் ஏற்கனவே சுட்டிக்காட்யிருக்கின்றோம். யுத்தநிறுத்த சூழலை மிக மோசமான நெருக்கடிக்கு உள்ளாக்குகின்ற நிலைமைக்கு இவைதான் காரணமாக இருக்குமென்று நாங்கள் கருதுகின்றோம் எனவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.